No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR

வை. மு. கோதைநாயகி அம்மாள்

(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

# JEGAN MOHINI

மலர் 8 ஜகன்மோகினி இதழ் 1



ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

# ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரு. 1-8-0 தான். “**சாமளநாதன்**” சென்ற வாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 அணா கூடச் சேர்த்து ரு. 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

## சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது; வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாதலால் முன்பண மனுப்புவ**[illegible]**ம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்**

**மானேஜர்.**

26 FEB 1931

## 11-வது அதிகாரம்

## பொங்கிய அன்பும், தங்கிலாத் துன்பமும்

அன்று சுலோசனாவின் வீட்டில் நடந்த சம்பவங்களே நமது நற்குண நாரீமணியாகிய பரிமளாவின் உள்ளத்தில் மறையாது குடிபுகுந்து அதே நினைவாக வேலை செய்துகொண்டிருந்தன. இவ்விஷயங்கள் தன் பர்த்தாவுக்குத் தெரியாமலிருக்கவேண்டுமே என்று அவள் பயந்திருந்தாள். சுலோசனாவும் இதைப்பற்றி அவரிடத்தில் தெரிவிக்காம லிருக்க வேண்டுமே என்று கடவுளை வேண்டிக்கொண்டிருந்தாள். அது விஷயமாக எதுவுமே வெளி வாராமையினால் சுலோசனா இதைப்பற்றித் தன் பர்த்தாவிடத்தில் சொல்லவில்லை என்பதை நன்குணர்ந்து கொண்டு அவளிடத்தில் பரிமளாவுக்கு முன்னிலு மதிகரித்த நம்பிக்கையும், நன்மதிப்பும் உண்டாகியது. இவர்களுடைய விஷயத்தில் தான் என்னவிதமான வேலையைச் செய்தால் தன் கணவனின் மனம் நிம்மதியாகும், சந்தோஷமடையும் என்கிற கவலையே பெரிதும் அவள் மனத்தில் தோன்றித் தோன்றி வதைத்துக்கொண்டிருந்தது. அதுவிஷயமாக சுலோசனாவினிடத்திலோ, அன்றி விமலநாதனிடத்திலோ கேட்பதற்கு மிகவும் அஞ்சினாள். பலதரம் அவ்விஷயமாக தன்னாயகனிடத்தில் பேச வாயெடுத்தும் நடுக்கத்தினால் வாளாவிருந்துவிடுவாள். இவ்விதமே மெல்லவும் கூடாமல், சொல்லவும் கூடாமல் தத்தளித்திருந்தாள்.

---

சில குடும்பங்களில் தண்டத்திற்கு சோற்றைத் தின்பதற்கு வரும் சோற்றின் முகமான உறவினர்கள் அவ் வீட்டுக்குத் தாந்தாம் அதிகாரிபோன்று நினைத்து வெட்கமின்றி வீட்டுக்காரர்களின் நெருங்கிய உறவினர்களைப் பற்றி இழிவாகப் பேசவந்துவிடுகிறார்கள். இந்த அசட்டுத் துணிபு வீட்டுக்காரர்கள் கொடுக்கும் சுதந்திரத்தினால் ஏற்படுவதோ, அன்றி அவர்களின் மண்டைத் திமிறினாலோ தெரியவில்லை.

210028



ஒரு தினம் விமலநாதன் தன் மனத்துயரத்தைச் சற்றும் தாங்கமாட்டாமல் கண்ணீர் வடித்தவண்ணம் தனது சொந்த வேலைகளையும் கவனியாது படுத்திருப்பதைக் கண்ட பரிமளா மிக்க வருத்தத்தை அடைந்து தான் எவ்வாறு சென்று சமாதானம் செய்வதென்று யோசித்தாள். பிறகு அவளுக்கு ஓர் யோசனை தோன்றியது. உடனே தன்னறையில் சென்று ஒரு கடிதத்தை எழுதி அதை மடித்துத் தனது குமாரனான செல்வமணியினிடம் கொடுத்து "என் கண்மணி! இந்த கடிதத்தை உன் பிதாவினிடத்தில் கொண்டு கொடுத்துவிட்டு வா!" என்று கூறி அதைக் கொடுத்தனுப்பினாள். செல்வமணியும் கடிதத்தைக் கொண்டு விமலநாதனிடத்தில் கொடுத்தது. உடனே விமலநாதன் அக்கடிதத்தை வாங்கி வெகு விரைவில் படிக்கலானான். அது பின்வருமாறு:—

"என்னாருயிர் பிராணவல்லபா! நான் இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுவதை நோக்கி நீங்கள் ஆச்சரியமடையலாம். சாதாரணமாக கடிதத்தில் எழுதுகிற விஷயங்களை நேரில் பேசுவதற்குக் கூடாமலோ, அச்சத்தினாலோ தடைபடலாம். கடிதத்தில் எழுதமுடியாத சில விஷயங்களை நேரில்பேசுவதற்கு அனுகூலமாக இருக்கலாம். அதே போல நான் ஒரு விஷயத்தைப் பற்றிப் பலதரம் தம்மிடம் நேரில் பேசுவதற்கு முயன்றும் என்னால் பேச வியலாதுபோயிற்று. அதை இப்போது இக்கடிதத்தில் எழுதுகிறேன். என்னிடத்தில் தங்களுக்கு உறுதியான நம்பிக்கைக் கொள்வதற்கு இது ஓர் உறுதிச் சீட்டாகவும் இருக்கும். தங்களுடைய சகலமான அந்தரங்க விஷயங்களை யான் அறிந்திருப்பினும் என்னால் அதற்கு ஓர் அனுகூலமுமில்லை என்பதை நினைக்க மிகவும் விசனப்படுகிறேன். தங்களுடைய எந்த விஷயத்திலும் நான் உடனிருந்து உழைப்பதற்கே காத்துக்கொண்டிருக்கிறேனேயன்றி எனக்கு

---

தமக்குச் சம்மந்த மில்லாத மனிதர்களைப் பற்றி இழிவாகப் பேசுவதற்கும் அதிகாரம் செலுத்துவதற்கும் முன் வந்துள்ள தூரத்து உறவினர்களின் ஆதிக்கத்தின் ஆரவாரத்தில் சொந்த மனிதர்கள் செல்வதற்குக் கூச்சமே அடைய வேண்டி இருக்கிறது.

வேறு வித்பாசங் கிடையாது. தங்களுடைய சித்தத்தை வதைக்கும் நோயை நீக்கும்பொருட்டாக நான் பலவிதத்தில் முயற்சி செய்தே வருகிறேன். தாங்கள் ஓர் ஆண் சிங்கமாக இருக்கையில் தங்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்து கொள்ள ஏன் பின்வாங்கவேண்டும்? தாங்கள் அருமையாகக் காதலிக்கும் அந்த அம்மாளை நானும் என்னுயிர்த் தோழியாக நேசிக்கிறேன். அந்த அம்மாளின் ஓர் உன்னத குணமே என்னை அவர்களுக்கு அடிமையாக்கிவிட்டது. உலகத்தில் அவர்களைப்போன்ற மற்றொரு பெண்மணியைத் தேடி எடுப்பது மிகவும் துர்லபம். அந்த அம்மாளுடன் பேசுவதற்காக நானே தினம் ஆசித்து அவ்விடம் சென்றாலும் அவர்களிடத்தில் உங்கள் விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு முடிவதில்லை. உங்களுடைய அருமையான காலத்தையும்,—அந்த அம்மாளுடைய பக்குவமான யௌவனத்தையும்—வீணே பாழாக்கிக் கொண்டு ஏன் சதா துயரத்தில் அளையவேண்டும்? நாதா! உங்களுடைய விருப்பம் யாதாயினும் நான் அதற்கு ஒரு சிறிதும் தடை கூறமாட்டேன். நீங்கள் தற்போது கண்ணீர் பெருகப் படுத்திருப்பதைக் கண்டால் என்னால் சகிக்கக் கூடவில்லை. சகலவிதத்திலும் தற்காலம் மிகவும் மாறுதலை படைந்துகொண்டே வருகிறது. விதவா விவாகமும் அதிக்ரமித்துக்கொண்டே வருகிறது. எந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தாலும் அதில் விதவா விவாக மில்லாமலில்லை. தாங்கள் சகலமும் தெரிந்தவர்கள். அந்த அம்மாளின் துயரத்தையும் கண்டு சகிக்க முடிவதில்லை. நீங்கள் எக்காரணம் பற்றி இன்னும் விவாகம் செய்துகொள்ளாமல் இவ்விதம் கஷ்டப்பட்டு வருந்தவேண்டும். சுலோசனாவைப் போன்ற பாலிய, உலகமே அறியாதவர்களுக்குக் கட்டாயம் விவாகம்

---

எந்த குடும்பத்திலும் குடும்பத் தலைவர்களுக்குள்ள அதிகாரத்தை அங்கு வருவோர் போவோர் செலுத்த வாரம்பித்தால் அவ் வீட்டிற்குப் பிறர் செல்வதற்கே மனங் கொள்ள முடியாது. பிறகு வீட்டுக்காரர்களின் சமாதானத்தை முன்னிட்டுச் செல்வது மனத்திற்கு ஏதோ ஒருவிதமான வருத்தமாகவே இருக்கிறது.

செய்யவேண்டியதுதான் நல்லது. இவ்வுலகத்தில் அவர்கள் பிறந்து என்ன பலனைக் கண்டார்கள்! கேவலம் பால் மணமாறாத குழந்தைகளுக்கு இவ்வித விதவைப் பட்டத்தைச் சூட்டி உதவாப் பண்டமாகச் செய்துவிடுவதைப் போன்ற கொடிய பழக்கம் எதுவுமே இல்லை. தன் கணவன் என்றதையும், சதி பதிகளின் உண்மையையும் சற்று மறியாத கேவலமான இளம் பிராயமுள்ள குழந்தைகளுக்கு அவசியம் மறுமணம் செய்வித்தே தீரவேண்டும். அத்தகையவர்களைப் பார்ப்பதாலும், அவர்களுடன் பழகுவதாலும் மனம் தத்தளிக்கின்றது. கணவனை ஒரு தினமேனும் கண்டறிந்தவர்களுக்கு வேண்டுமானால் விவாகம் செய்யாது வேறு நல்ல வழியில் அவர்களுடைய காலம் கழிவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அவர்களைக் காப்பாற்றலாம்: கேவலம் ஒன்று மறியாத குழந்தைகளை வதை செய்வது; ஒருநாளும் நன்மையாகமாட்டாது. என்னுருயிர் காதா! தாங்கள் மனவேதனையினால் தினே தினே மெலிந்துவிடுவதை நான் ஒவ்வொரு நிமிடமும் கண்டு அபாரமான வருத்தத்தை யடைகின்றேன். நீங்கள் வருந்துவதைக் கண்டால் என்னுள்ளமும் துடிக்கின்றது. என்னால் தாங்கவியலாத சங்கடத்தை அடைகின்றது. ஆகையினால் திக்கற்ற பரதேசியாகிய அந்த அம்மாளை ஆதரித்த பலனும் கிடைக்கும். தமது மனோரதமும் பூர்த்தியாகும். நீங்கள் உடனே அதற்குத் தக்க ஏற்பாடு செய்து அந்த அம்மாளை விவாகம் செய்து கொள்ளுங்கள், என்னால் கூடிய உதவியை அதற்குச் செய்ய நான் தயாராக விருக்கிறேன். நான் அவ் விஷயத்தில் சற்றும் பொறுமையே கொள்ளவில்லை. எனது பூர்ண மனத்துடன் தெரிவிக்கும் மொழி இது என்பதை நம்புங்கள்.

---

சோற்று விருந்தினர்களுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்துவிடும் வீட்டுத் தலைவர்களுக்கு ஒரு நிமிடமும் சந்தோஷமே இல்லை. தின்று செலவு செய்வதோடு தமக்கு வேண்டியவர்களைத் தூற்றிய வருத்தமும் சேருகிறது. பின்னர் சமாதானம் செய்யும் சிரமும் கூடுகிறது. வீட்டின் சொந்த மனிதர்களின் அதிகாரத்தைப் பிறர்க்கு விட்டுக் கொடுப்பதைப் போன்ற மடமை வேறு எதுவு மில்லை.

நீங்கள் படும் துன்பத்தை இனி என்னால் கண்டு சகிக்க இயல வில்லை. நாதா! நான் வேடிக்கைக்கு சொல்வதாக நினைக்க வேண்டாம். முக்காலும் சத்தியமாகக் கூறுகிறேன். நீங்கள் சந்தோஷமாக இருப்பது தான் எனது வாழ்நாளின் இன்ப மாகும். உங்கள் முகம் மலர்ந்திருந்தால் தான் என் அகம் குளிர்ந்திருக்கும். உங்களுடைய நிழலே நான்; ஆகையினால் சுகம் துக்கம் இரண்டிற்கும் நான் பங்குதாரி யாவேன். என் மனத்திலுள்ளதைத் தெரிவித்தேன். தாங்கள் எதற்கும் யோசிக்கவேண்டாம். இஷ்டமுள்ளவர்கள் நமது வீட்டிற்கு வரட்டும்; இஷ்டமற்றவர்கள் வரவேண்டாம். பாலிய விதவை களின் பரிதாபத்தைக் கண்டு கண்ணீர் சிந்தும் எவரும் இதை எதிர்க்கமாட்டார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட வரையில் உலக மறியாத சிறுமிகளான பாலிய விதவை களுக்குக் கல்யாணம் செய்வதில் தப்பிதமே இல்லை; நன் ருகச் செய்யலாம் என்று அனேகர் கூறுவதைக் கேட்டிருக் கிறேன். அவ்வாறே சிலர் செய்து மிருக்கிருர்கள். சிலர் வாய்ப்பறை மட்டும் சாற்றிவிட்டுப் பேசாதிருக்கிருர்கள். பாலிய விதவைகளைக் கண்டு மனம் சகிக்கக் கூடவில்லை. நான் நேற்று எனக்குத் தெரிந்தவர்களின் வீட்டிற்குச் சென்றிருந் தேன்; அங்கு அவர்களுடைய மூத்தப் பெண் விவாகமாகிய சில மாதத்திற்குள்ளாகவே விதவையாகி விட்டதாம். அந்தப் பெண் பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கிருள். இப்போது தான் அப் பெண்ணுக்கு 18 வயதாகிறது; ஏதோ படிக்கிரு ளாம். அவர்களின் பங்களாவில் அளவற்ற புஷ்பங்கள் உண் டாகின்றனவாம். அதை எல்லோரும் அணிந்துகொண் டார்கள். அந்த ஒரு குழந்தைக்கு மட்டும் அப் புஷ்பம் சூட் டாமல் மற்றையோர் அணிந்துகொள்வதையும், அப் பெண் ணின் முகம் ஏதோ ஒரு மாதிரியாக; ஆகிவிட்டதையும், அப்

---

அயல் மனிதர்களின் அதிகாரம் நிறைந்துள்ள வீட்டிற்குச் சொந்த மனி தர்கள் வருவதற்கே மனங்கூசினால் அவ்வீட்டுக்காரர்களின் நிலைமை எவ்வித மாகும். அன்னியரை அன்னியரென்கிற பதப்படியே அகற்றித் தாமே அதி காரம் செய்தால் அதன் மகிமை ஓர் தனித்ததுதான்.

புஷ்பத்தை எடுத்து அக் குழந்தை முகர்ந்து பார்த்து வைத்ததையும் நேரில் கண்ட என் கண்ணில் தாங்கமாட்டாத கண்ணீர் வந்துவிட்டது. இத்தனை பெயர்களும் அலங்காரம் செய்துகொள்கையில் அக் குழந்தையின் மனம் என்ன பாடு படும். அதற்கு எத்தகைய துக்கம் வரும். ஐயோ! அக் கண்ராவியைக் காணக் கூடவே இல்லை. அக் குழந்தைக்கு ஏன் விவாகம் செய்தல் கூடாதென்று நான் ப்ரஸ்தாபித்தேன். பெற்ற தாய் தந்தைகள் மனப் பூர்வமாக சம்மதிப்பதாயும் அவர்களுக்கு மேலுள்ளவர்களே அதற்கு ஆக்ஷேபிப்பதாயும் கூறி பெண்ணின் தாயார் புலம்பினாள். "இக் குழந்தையின் ஆயிசு காலம் முற்றும் எவ்விதம் தான் வைத்துக்கொண்டு அடிப்பது?" என்று கண்ணீர் விட்டாள். இத்தகைய கோர சம்பவங்களைக் காணமாட்டாமல் நமக்கே துக்கம் வரும்போது அதை அனுபவிப்பவர்களின் மனம் எவ்விதம் தான் தத்தளிக்கும். நாதா! நீங்கள் வீணே காலஹரணம் செய்யவேண்டாம். கட்டாயமாக விவாகத்தைச் செய்துகொள்ளுங்கள். தங்களுடைய வித்தைக்கு எங்கு சென்றாலும் மதிப்பு உண்டு. ஆகையினால் தாங்கள் அந்தம்மாளை அழைத்துக்கொண்டு இவ் வூரையும் விட்டுத் தொலைந்துவிடலாம். நான் தங்களுடைய பணிவிடைகளைச் செய்ய ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்; வருந்தாதீர்கள். என்னிடம் விச்வாசம் கொள்ளாதீர்கள்.

இங்ஙனம் தங்களுடைய
சுகத்தைக் கோரும்
அடிமையான
பரிமளா".

---

குடும்பத் தலைவர்களுக்கு வேண்டியவர்களைப்பற்றி அன்னியர்கள் பேசும்படியான அதிகாரத்தைக் கொடுப்பதானது அக்குடும்பத்தின் மதிப்பை, கௌரவத்தையே குலைத்துக்கொள்வதற்கு வேர்ப்புழுவை விருத்தி செய்வதுபோன்றதாகும்.

அந்த கடிதத்தைப் படித்த விமலநாதனே பிரமித்தான். இதென்ன உண்மையில் பரிமளா எழுதியதா! என்ன ஆச்சரியம்! அவளுடைய மனம் இத்தகைய இளகியதா! இக் கடிதம் படிப்பது எனக்கு ஓர் கதை படிப்பது போன்ற ச்வாரஸ்யமாகவன்றோ இருக்கிறது. பேஷ்! இருக்கட்டும்'' என்று நினைத்து செல்வமணியை நோக்கி "கண்மணி! உன் தாயாரை நான் அழைப்பதாகத் தெரிவி'' என்றான். பரிமளா கடிதத்தை மகனிடமனுப்பிவிட்டு அவ்விடத்திலேயே மறைந்து கவனித்துக்கொண்டிருந்தாளாகையினால் தன்னை வரும்படியாக அழைத்த உடனே தாமதமன்னியில் அவள் தன் கணவன்முன் தோன்றி அவனிரு கைகளையும் பற்றிக்கொண்டு "நாதா! இதோ வந்துவிட்டேன்'' என்று கூறியவாறு நின்றாள்.

அவளைக் கண்ட விமலநாதனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சற்று மவுனமாக இருந்தான். பின்னர் அவளை அருகில் உட்காரச் செய்துகொண்டு "பரிமளா! உன்னுடைய பழய கர்நாடகங்கள் ஒழிந்ததுடன் இத்தகைய கடிதத்தை எழுதவும் பழக்கிக் கொண்டாயே! இக் கடிதம் படிப்பது எனக்கு சற்றும் அலுப்பாகவே இல்லை. இதை யோர் நாவல் படிப்பது போன்று படித்தேன். என்னிடத்தில் நீ ஆழமான அன்பு கொண்டிருப்பதை நான் அறிவேன். எனினும் எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றும் விஷயத்திலும் நீ எனக்கு ஒப்புயர்வற்ற துணைவியாக இருப்பது பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கின்றேன். பாழாய்ப் போன பாமர ஜனங்களுக்குச் சற்று இதுகாறும் பயந்தேனே யன்றி வேறல்ல. என் கண்மணியாகிய சுலோசனாவை ஒருபோதும் விடமாட்டேன். அவள் பொருட்டே என்னுயிர் நிலைத்திருக்கிறது என்பதை நீயே அறிந்திருப்பாய். நான் எனக்கு அறிவு தெரிந்த நாள் முதலாக என் அன்பிற்குப் பாத்திரமாகிய அரிவை, என்னருமை சுலோசனா தான் என்பதை உன்னிடமும் பன்முறை கூறி யிருக்கிறேன். உன்னிட

---

மரியாதை என்பது எல்லோருக்கும் பொதுவானது. மரியாதை தப்பி நடந்தால் யாருக்கும் மனவருத்தமே. வசையோ, திட்டோ தன் சொந்த மனிதர்களிடம் கேட்பது சகஜம். அன்னிய அனுமதேயங்கள் பேசுவது சற்றும் சகிக்கக்கூடாத விசனமேதான்.

யிருந்து இக் கடிதம் கண்டது எனக்கு மிக்க சந்தோஷமாக இருக்கிறது. எனினும் இதோ உன் பிதா எழுதியுள்ள கடிதத்தைப் பார்.'' என்று ஒரு கடிதத்தைப் பரிமளா விடத்தில் கொடுத்தான்.

அதை வாங்கிய பரிமளா வெகு விரைவில் அதைப் படிக்கலானுள்.

''க்ஷேமம்.

இதுகாறும் மாப்பிள்ளை என்று அழைத்ததுபோன்று இனி அழைப்பதற்கு என் மனம் இடங்தரவில்லை. என் குழந்தையை அனியாயமாக உங்களிடம் கொடுத்துப் பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டதுபோன்று செய்துவிட்ட மடமையை இப்போதே நன்கு உணர்கின்றேன். உங்களுடைய போக்பதையைக் கல்யாண காலத்திலேயே கண்டேன். அப்போது அதை நான் வேறு விதமாக நம்பினேன்; அதனுல் ஏமாற்ற மடைந்தேன். தாங்கள் ஓர் பெரிய வக்கிலாக இருந்தும் இவ்விதம் கேவலமான, இழிவான காரியத்தைச் செய்வதற்கு மனந் துணிந்ததை எண்ணி வியப்புறுகிறேன். என்னருமை பரிமளாவை அனியாயமாக மடித்துவிட்டேன். அவளுடைய வாழ்வு முற்றும் ஒரு விதவை கைப்பற்றி இருக்கிருள் என்பதைக் கேட்க என் வயிறு பற்றி எரிகின்றது. உங்களுக்கு ஓர் உடன்பிறந்த சோதரி என் பரிமளாவைப்போல புலம்பி மடியும்படியாக நேர்ந்து தாங்கள் கண்டால் அப்போது அந்த வருத்தமறிவீர். என் குழந்தையை ஓர் வெள்ளாட்டிபோன்று வைத்திருக்கும் வயிற்றெரிச்சலைக் கண்டு நான் கண்ணீர் சிந்துவது ஒருபோதும் வீணுகாது. அந்த விதவைக்கு நீங்கள் அடிமையாகியிருக்கும் வெட்கக் கேட்டைக் கண்டு என் மனம் கொதிக்கின்றது. என் குழந்தையை எங்களிடம் வெறுப்படையும்படியாக நீங்கள் ஏதோ மந்திரம் செய்துவிட்டதனுலேயே

தாம் பெற்ற மக்களையே வயிறெரியும் வண்ணம் பேசும் புண்ணியாத்மாக்களும் உலகத்திலிருக்கின்றுர்கள். கணவன் வீட்டில் வகையற்று மனம் தவிக்கும் சமயம் பெற்றோரும் சுடுசொம்போன்று வார்த்தைகளைக் கொட்டினுல் அந்நங்கையின் மனம் எவ்விதம் அடிக்கும்.

அவளும் மயங்கிக் கிடக்கின்றாள். அவளுடைய மதியை மயக்கிய உமது சாமர்த்தியத்தை நீங்கள் ஒருவரே கொண்டாட லாகுமேயன்றி அறிவு படைத்த எந்த அறிவாளிகளும் அதை ஒரு கேவலமாகவே எண்ணுவார்கள். என் குழந்தையின் செய்தியொன்றும் எங்களுக்குத் தெரிவிக்காது நீங்கள் மறைப் பதிலிருந்தே அவளை நீங்கள் நடத்தும் மாதிரியை நான் நன் கறிந்திருக்கிறேன். என் குழந்தையின் வாழ்வை பாழ்ப் படுத்தியதுபோல அவளுடைய உயிரையும் நீங்கள் இனி ரகசி யத்திலேயே வாங்கிவிடுவீர்களென்ற சந்தேகம் என் மனத் தில் போராடுகின்றது. ஏற்கெனவே மண்ணெண்ணையை யூற் றிக் கொன்ற கேஸ்கள் அனேகம் பேப்பரில் கண்டுளேன். இப்போது அதே கேஸ் உமது விஷயமாக மீண்டும் தொடங்கிவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. நான் என் குழந்தையை ஓர் ஆண்பிள்ளையைப்போல வைத் துக்கொண்டு ஆதரிக்கின்றேன். உங்களிடத்திலிருந்து அவள் சிறுமைபடைய நான் சம்மதிக்கமாட்டேன். ஆகையினால் அவளை இனி எங்கள் வீட்டிற்கே அனுப்பிவிடுங்கள். கோடிக் குக் காய் கனமில்லை என்பார்கள். அதுபோன்று என் குழந்தை எனக்கு அதிக பாரமாகமாட்டாள். இக்கடிதம் என் வயிறெரிந்து எழுதுகிறேன். என் குழந்தையை உடனே அனுப்புங்கள். அந்தச் சண்டாளி விதவையும் நீங்களும் கட்டி யழுங்கள். இந்தக் கண்ராவியைக் கண்டு என் குழந்தை கண் ணீர் உதிர்க்கவேண்டாம். என் குழந்தையின் உயிர் இருக்கை யில் என்னிடம் சேர்ப்பித்துவிடுங்கள். அவள் உயிருடனிருந் தால் அதுவே எங்களுக்குப்;போதும்,

இங்ஙனம்
பசுபதி.''

---

பெற்றவர்களே அன்பு காட்டாவிட்டால் மற்றவருக்கு என்ன அன்பு சுரக்கும்? "உன்னை இத்தனை வருடமாக வைத்துக்கொண்டு சோறு கொட்டு கிறேனே" என்று கூறும் வார்த்தையைக் கேட்டவர்கள் ரோஷம் தாங்காது ப்ராணனை விட்டு விட்டால் பிறகு ஒப்பாரி வைத்துப் புலம்புவதில் என்ன உபயோகம்? நொந்த மனத்தை மீண்டும் நோகச் செய்வது போன்ற மடத் தனம் வேறு எதுவுமில்லை.

என்கிற கடிதத்தைப் படிக்கின்றபோதே பரிமளாவின் கண்கள் சிவந்தன. கோபம் உச்ச நிலையை அடைந்தது. தன் பிதாவின் மந்த மதியை எண்ணி வருந்தினாள். தன்னுதனை நோக்கி, "என் பிராண நாதா! தாங்கள் இக்கடிதத்தை பொருபொருட்டாக நினைக்கவேண்டாம். இதற்குச் சரியான பதிலை நானே எழுதுகிறேன். இதை எண்ணிக் கலங்கவேண்டாம். என்னுடைய சுகத்திற்கும் துக்கத்திற்கும் நானே பாத்யமுடையவளேயன்றி பிறர் பாத்யமுடையவராகமாட்டார்கள். தாங்கள் இன்று முற்றும் விசனமாக வீற்றிருந்ததற்குக் காரணம் இக்கடிதமும் சேர்ந்திருக்கும் என்று இப்போது நான் நினைக்கின்றேன். நாதா! தாங்கள் என் விஷயத்தில் சரியாக நடக்கவில்லை என்கிற வார்த்தையை என் வாயினால் நான் சொன்னால் அதைக் கண்டு நீங்கள் கவலையுறலாம். எனக்கு அவர்கள் மடத்தன்மையால் உளறுகிறபடி ஒருவிதமான துன்பமும் இல்லை என்பதை நான் கடவுள்மீது ஆணையாக இப்போது சொல்வேன். நாதா! ஆதியில் நான் பெரும் கர்னாடகமாக இருக்கையில் எனக்கு ஒன்றும் விவகாரம் தெரியாமலிருந்ததை நான் இப்போது எண்ணி துயருறுகிறேன். எனக்குக் கடவுள் கொடுத்த அறிவினால் இனிமேல் அவ்வாறு நடக்கமாட்டேன். தங்கள் மனத்தை ஆதியிலிருந்து கவர்ந்துகொண்ட மங்கை வேறொருத்தி இருப்பதை அறிந்த பின்னரும், மகா குணவதியாயும், உத்தமியாயுமிருக்கிற என் னருமை சகோதரி சுலோசனாவை பலவிதத்திலும் கண்டறிந்துப் பழகிய பின்னரும், உலகவியலைத் தெரிந்தும், காதலின் மேன்மையை—உயர்வை, சக்தியை—பல நூல்களில் படித்தறிந்த பின்னரும், நேரில் கண்ட பின்னருமா நான் ஒன்றுமறியாத மூடத்தன்மையாக இருப்பேன் — மறுப்பேன் — தங்கள் மகிழ்ச்சியைக் கெடுப்பேன்; என் சந்தோஷத்தையும் குலைத்துக்கொள்வேன் நான்? அவ்வாறு தாங்கள் நினைக்கவேண்டாம். தாங்கள் எனக்கு ஒரு விதத்திலும் த்ரோகம் செய்யவில்லை. இன்னும் ஆழ்ந்து பார்த்தால் நான்தான் உங்களிருவருக்கும் மத்தியில் வந்து சேர்ந்தேன்.

---

யோக்யமான, கண்ணியமானவர்கள் 10 பேர் சேர்ந்து செய்யும் எந்த காரியத்திற்கும் ஓர் தனித்த மதிப்புத்தான். யோக்யதையற்றவர்கள் 100 பெயர்கள் சேர்ந்து செய்யும் காரியத்திற்குச் சிறிது கூட மதிப்பு ஏற்படாது.

எனக்கு அந்த அம்மாளிடத்தில் அத்யந்த ப்ரீதி உண்டாகிவிட்டதால் நான் இதில் ஒரு சிறிதும் தடை சொல்லமாட்டேன். அநாதையாயுள்ள அந்தம்மாளுக்கும் நாம் ஆதரவு செய்ததாகும். இருவரின் மனமும் களிக்கும். ஆகையினால் தாங்கள் வீணாக வருந்தி பொழுதைப் போக்காமல் விவாகத்தை ரகஸியமாகச் செய்துகொள்ளுங்கள். நாங்களிருவரும் உடன் பிறந்த சகோதரிகளைப்போன்று அன்யோன்யமாக இருப்போம். நான் சொல்வது உங்களுக்கு விநோதமாகத் தோன்றலாம். நாம் சென்ற வாரம் சினிமாப் படக்காட்சி பார்த்தபிறகு இந்த காதல் செய்யும் கூற்றின் விவரமறிந்தேன். காதல் வைத்த விடத்தில் பூர்த்தி இல்லையேல் ஆள் இறப்பது திண்ணம், என்பதை பலவிதத்தில் அறிந்தேன். நாதா! எனக்கு முக்கியமானது தங்களுடைய உயிரும், தங்கள் களிப்பும், இன்பமான வாழ்வுமே யாகும். ஆகையினால் அனியாயமாக உங்களிருவரின் உயிரையும் பாழ்படச் செய்யவேண்டாம். "விதவையை விவாகம் செய்துகொண்டான்" என்று ஒன்றுமறியாத அறிவிலிகள் கூறுவார்களேயன்றி அறிவு படைத்தோர், சுலோசனாவைப் போன்ற பாலிய விதவைகளின் கண்ராவியைக் கண்டு கண்ணீர் உதிர்த்துக் கலங்கியபாரும் அவ்வார்த்தையைக் கூறமாட்டார்கள். உண்மையில் சுலோசனா விதந்துவே யல்ல. அவளுடைய அறிவை அவள் அறியாமுன்னர் பிறர் செய்த காரியத்தினால் காண்போருக்கு விதவை என்கிற ஒரு கொடிய பதத்திற்கு ஆளாகிவிட்டாளே யன்றி அவள் மனத்தில் கணவனென்கிற பதத்தினால் எண்ணியது தம்மையே யாகும். வேறுவிதத்தில் அவர்கள் விதவையே யல்ல. இந்த ஒரு கொடிய பழக்கத்தை மட்டும் வேரறுக்கவேண்டும். நாதா! என்ன விது? ஏன் இவ்வாறு குழந்தையைப்போலப் புலம்புகின்றீர்கள்? நான் கூறுவதற்கு யாதொரு பதிலுமே கூறவில்லையே! நானுரைக்கும் வார்த்தைகள் தமக்குப் பிடிக்கவில்லையா! அன்றி என்மீது

---

மதிப்பு என்பது மனிதர்களின் யோக்யதையினாலும் நன்னடக்கையினாலும் உண்டாவதே யன்றி அயோக்யத்தன்மையாக நடப்பவர்களுக்கு ஒருவிதத்திலும் நன்மையே இல்லை. அவர்கள் புதிது புதிதான காரியங்களைச் செய்து அதனால் நன்மதிப்பு பெற எண்ணிய போதிலும் அவர்களுடைய ஊழலான நாற்றக் குப்பையின் மணமே முதலில் வீசுகின்றது.

கோபமா! ஒன்றும் தெரியவில்லையே! என்ன இது! கூறுங்கள்" என்று கூறியவாறு விமலநாதனை அணைத்துக்கொண்டு கண்ணைத் துடைத்தாள்.

தாங்கவியலாத அபாரமான துக்கத்தை படைந்து புலம்பும் விமலநாதன் பரிமளாவின் கரத்தைப் பற்றிக்கொண்டு "ஆ! பரிமளா! நான் என்ன பதிலளிப்பேன். எனக்கொன்றுமே தோன்றவில்லையே! உன் வாக்கிலிருந்து இத்தகைய அமிருத வசனங்கள் வரும் என்று நான் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உலகத்தில் அனியாயம் அதிக்ரமித்துவிட்டதனால் எதையும் அனியாயமென்றே கருதி விடுகிறார்கள். உண்மையான—தெய்வீகமான அன்பு, காதல் என்பதை சகலரும் தெரிந்திருக்கையில் கூட அதை இவ்விதம் ஒப்புக்கொண்டு பயன் படுத்துவதற்கு யாரும் முன் வருவதில்லை. ஆனால் இவ்விதமான விஷயங்களில் யாரும் தம்மைத் தாம் அடக்கி ஆளுவதற்குத் திறமற்று, ரகஸியத்தில் அனேக விதமான கெடுதல்களையும், உயிர் நீங்கும், காரியங்களையும் செய்வது மட்டும் குறைவில்லை. காதல் என்பதை வெளிப் பேச்சில் இளக்காரமாகக் கூறுவதும், பரிகஸிப்பதும், "காதலாம்; சாதலாம்," என்று நகைப்பதுமாக சிலரிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அனியாயமாக ஒரு மாதின் கற்பைக் குலைப்பதும், ஸ்திரீ ஹத்தி செய்வதுமாக இருக்கிறார்கள். இவ்வித ரகஸியம் எவ்விதமோ வெளியாகி விடுகிறது. உன்னதமான காதலின் திறனை பறியாது பேசும் காதகர்கள் மேல் குறித்த கள்ளத்தனத்தில் குரூரமாக நடப்பதற்கு ஒரு வித நகைப்பும் இல்லை என்று நினைக்கின்றார்கள். எனக்கு அவ்விதம் தோன்றவில்லை. அக்ரமமான காரியம் எதுவும் செய்யாது நம்முடைய தவறுதலிலிருந்து நாம் திருந்துவதே நலமென்று—நன்மை என்று—எனக்குத் தோன்றுகின்றது. அனியாய விதத்தில் கள்ள நட்பு கொண்டு கெட்டலையும் கோஷ்டியில் நானும் இருந்தால் இத்தனை

---

உலகத்திலுள்ள எல்லாவிதமான துக்கங்களிலும், மனமில்லாத கட்டாய மணத்தினால் உண்டாகும் துயரம் — விசனம் — எவ்வகையிலும் சோதனித்த சித்திரவதையாகும். அவர்களின் விசனம் தணிவதற்கு வழி ஏதேனும் உண்டா! உண்டு. அது எப்போது? இறந்த பிறகு.

நாளைக்கு என் கதியும், என் கண்மணியின் கதியும் யாதாகுமோ அறியேன்; நான் என்மனமாறக் காதலித்திருப்பினும் உலகத்தினருக்கு சற்றும், என் பெற்றோருக்குச் சற்றுமாகப் பயந்தே வருகிறேன். விவாகமின்னதே என்று அறியும் பகுத்தறிவு பெறாத ஓர் குழந்தையை வேண்டுமென்று பாழ்படச் செய்துவிட்டு அவளை 'விதவை; விதவை' என்று கூறி மூலையில் உட்கார வைக்கும் சமூக ஊழலைத் தொலைப்பதற்கே நான் வழி செய்கிறேன். பரிமளா! சற்று முன் நீ தெரிவித்தது போன்று எக் காரியத்திற்கும் ஆக்ஷேபனை செய்யக் கண் மூடித்தன்மையினால் முன் வருவார்களே யன்றி நல்ல சீர் திருத்தத்தைச் செய்து காட்ட யாவரும் முன் வருவதற்கு முகமில்லை போலும். இத்தகைய விதவைகள் அனியாயமாகத் தாமே அழிந்து கெட்டுப் பலவிதத்திலும் பாழாகி இறுதியில் உயிரையும் துறப்பதை விடத் தாராளமாக அவர்களுக்கு விவாகத்தைச் செய்வதில் தடையே இல்லை. குற்றமும் என் வரையில் இல்லை. பரிமளா! என் கண்மணியின் மீது அபாண்டமாகப் பழி சுமத்தும் காதகர்களை நோக்கின் அவளுக்கு வேண்டுமென்றே ஒரு பெருத்த இழிவைத் தேடவோ, அன்றி தாமே அவளைக் கெடுத்துக் கொலை செய்துவிடவோ அவர்கள் அஞ்சார்கள். இந்த திகிலே என்னை வதைக்கின்றது. நான் செய்த துர்ப்பாக்யத்தினால் என் கண்மணியை நான் அடையாவிடினும் அவளை உயிருடன் பொம்மையைப் போன்று பார்த்துக்கொண்டு சந்தோஷித்தால் அதுவே போதும் என்று நினைத்திருக்கிறேன். என்னை பெற்றோர்கள் அடியோடு நாசம் செய்துவிட்டார்கள். சுலோசனாவுக்கு சமீபத்தில் நேர்ந்த ஓர் விபத்தை நினைக்கின் பயமாக இருக்கிறது. அதாவது—அவளுடைய விரோதியாகிய அண்ணாசாமியும், சினிமாக் காரனாகிய ச்யாம்சுந்தரும் சேர்ந்து அவளை தப்பான அட்ரஸுக்கு வரச் செய்து அவளைக் கொலை செய்யவே நினைத்தார்கள். ஆகா! கடவுளின் கருணை அவரை நம்பிய எந்த பக்தரிடத்திலும் நிழல்

---

அறிவற்ற மனைவியுடன் இல்லறம் நடத்துவது ஒருமாதிரியான சங்கடம். அறிவற்ற, கேவலம் மூடமான கணவனுடன் அறிவு பொருந்திய மனைவி இல்லறம் நடத்துவதைப்போன்ற ப்ராண சங்கடம் வேறெதுவுமில்லை. இதை விவரித்து எழுதினால் இடம் இடந்தாது.

போன்று இருக்கும் என்பதை அன்றே நான் நன்கறிந்தேன். சுலோசனுவை விடுதலை செய்யும் பொருட்டாக அந்த விடத்தில் சர்ப்பம் வந்த அற்புதத்தை என்ன வென்று தான் சொல்வேன்? அந்த நாக ராஜனே அவளுடைய கற்பைக் காக்கும் பொருட்டு முன் வந்தான். பிறகு அவள் தப்பித்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். அவளுடைய பெரிய வைத்திய மாதின் குமாரன் அவள் மீது வஞ்சக வலை வீசி அவளை அமுக்கிவிடப் பார்க்கிறான். இவ்வித ஆபத்துக்கள் ஒவ்வொரு நிமிடமும் அந்த அபலைக்கு நேருகின்றன. அதைத் தடுக்கும் பொருட்டு நான் என்னுயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். என் அன்பின் நிழல் போன்ற நீயும் உதவி புரிய முன் வந்திருப்பதைப் பற்றி மிக்க சந்தோஷ மடைகின்றேன். இரவு பகலாக நான் கவலைப்படுவதெல்லாம் சுலோசனுவுக்கு ஒருவித ஆபத்தும் இல்லாமலிருக்கவேண்டுமே என்பது தான்'' என்று கூறினான்.

பிறகு அது விஷயமாகவே இருவரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்மேல் ஒருவிதமான தீர்மானமு மில்லாமலேயே சம்பாஷணைகலைய, அவர்கள் எழுந்துவிட்டார்கள். விமலநாதன் அன்று நடந்த சம்பாஷணையின் நினைவாகவே எண்ணாத விதமெல்லாம் எண்ணி மனந்தவித்து, சுலோசனுவைப் பார்க்கலா மென்று புறப்படுகையில்தான் நாம் முன்னர் தெரிவித்த வண்ணம் அவனுடைய சிநேகிதன் ஒருவன் வந்து மேற் குறித்த விஷயங்களைப் பற்றிப் பேசியது. உடனே விமலநாதன் கூற வியலாதக் கலக்கமும், அபாரமான திகிலும் கொண்டு பரிமளாவையும் கண்டு பேசாது பைத்தியங் கொண்டவன் போல மோட்டாரில் ஏறிச் சென்றான். மத்திய வழியில் இரயில்வே கேட்டுப் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு விமலநாதனுடைய மனம் தத்தளிக்கின்றது. "ஹா! என் கண்மணியை யார் அபகரித்துக்

---

மங்கையருக்கு எத்தவிதத்தில் என்ன சிறப்பு இருந்தபோதிலும் கணவன் சரியில்லாவிடின் உப்பில்லா உண்டிக் கொப்பே யாகும்; எவ்வளவு நெய்யும் உயர்ந்த சாமக்ரியைகளைக் கொண்டு செய்த பண்டமாயினும் முக்கியமான உப் பில்லையேல் அதை எங்ஙனம் உண்பது. எங்ஙனம் பசி ஆறுவது. எவ்விதம் மனந்தேறுவது? அந்தோ! அதை அனுபவித்தோரே அதை அறியவேண்டும்.

கொண்டார்களோ, தெரியவில்லையே! என்ன ஆபத்து நேர்ந்து விட்டதோ! எந்த துராத்மா அவள் பொன் போன்ற மேனியைத் தாங்கி வண்டியில் கிடத்தினானோ தெரியவில்லையே! என் கண்மணியின் மீது அன்புகொண்டு ஆதரிக்கும் நேயர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்ததாகவே தோன்றுகின்றது. அபகாரக் கர்த்தர்கள் அபரிமிதமாக இருக்கின்றார்களே! என்ன செய்வேன்? அவளுடைய உயிரையே வாங்கும் பொருட்டாக இவ்விதம் யாரேனும் செய்திருப்பார்களா! அவள் யாருக்கும் இணங்காது இருப்பதும், இந்த சிறு பிராயத்தில் அபாரமான புகழுடன் விளங்குவதனால் பொறாமை கொண்டு அவளைத் தூக்கிக்கொண்டுபோய் விஷமிட்டே கொல்வார்களோ! அன்றி சுட்டுக் கொல்வார்களோ! எந்த விதத்தில் கொலை செய்துவிடுவார்களோ தெரியவில்லையே! என் கண்ணே! நான் நல்ல செய்தியைக் காதில் கேட்பேனா! இச்சமயத்திற்கு இந்த கேட்டும் பூட்டவேண்டுமா! என்ன செய்வேன்?" என்று தத்தளிக்கின்றான். கேட்டு பூட்டி பல நிமிஷங்களாகியும் ரயில் வரவில்லை. விமலநாதனுடைய உயிர் நிமிடத்திற்கு நிமிடம் துடிக்கின்றது. கேட்டு பூட்டி 5 அல்லது 10 நிமிடந்தான் இருக்கும்; எனினும் விமலநாதனுக்கு 10 யுகங்கள் ஆகிவிட்டதுபோல் தோன்றுகின்றது. தவித்தவாறே அவன் கீழே இறங்கி கேட்டின் வழியிலேயே நின்றுகொண்டு பாழும் ரயில் சீக்கிரம் வரவேண்டுமே என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ரயில் அப்பொழுதுதான் மெல்லக் கிளம்பி வந்துகொண்டிருந்தது. அப்பொழுது மாலை 7 மணி சுமாருக்கு இருக்கலாம். விமலநாதன் கேட்டின் கம்பியைக் கையில் பிடித்தவாறு ரயில் போவதைப் பார்த்துக்கொண்டே நிற்கையில் அந்த வண்டியில் அண்ணாசாமியும் காவேரியும் உட்கார்ந்திருப்பதைக் கவனித்துவிட்டான். "ஆ! அதோ! அந்த சண்டாளன் இந்த வண்டியில் போகிறானே! அவன்மீதல்லவா நாம் சந்தேகங் கொண்டோம். இரு! ஆண்பிள்ளைகள், ஒரு

---

சிலருக்கு எங்கு சென்றாலும் எந்த விடத்தில் ?என்ன இருக்கிறதென்று குடைவதிலேயே நாட்டம். அவ்வாறு குடைந்து அகப்பட்ட புத்தகங்களை அடித்துக்கொண்டு வெகு சுலபமாகப் போய் விடுகிறார்கள்.

பெண்பிள்ளை என்று கூறியதால் ச்யாம்சுந்தர் ஒருவனும் இந்தப் பாவி ஒருவனும்; காவேரிதான் பெண்பிள்ளை என்று நாம் நிச்சயித்தோம். இவர்கள் இவ்வண்டியில் எங்கு செல்கிறார்கள்? ஒரு கால் இந்த வண்டியிலேயே சுலோசனாவைத் தூக்கிக்கொண்டு போகிறார்களோ! ஐயோ! ஒன்றும் தெரியவில்லையே! நாம் உடனே மோட்டாரை ஸ்டேஷனுக்கு ஓட்டிக்கொண்டு சென்று என்ன செய்தி என்பதை விவரமாக அறியவேண்டும்'' என்று தீர்மானித்து உடனே மோட்டாரில் ஏறிக்கொண்டு அந்த வண்டி எந்த ஸ்டேஷனில் நிற்குமோ அந்த ஸ்டேஷனுக்கு வண்டியை வெகு வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான். வண்டி குறுக்கு வழியாக வெகு விரைவில் சென்று ஸ்டேஷனை அடைந்தது. உடனே விமலநாதன் ப்ளாட்பாரம் டிக்கட்டுவாங்கிக்கொண்டு உடனே உள்ளே சென்று ரயில் வண்டியை முற்றும் கவனித்துக்கொண்டே வந்தான். அந்த வண்டியின் முன்பாகத்தில் அமைந்துள்ள இரண்டாவது வகுப்பு வண்டியிலேயே அண்ணாமலை இருந்ததாக நினைவாகையில் அங்கு தேடிக்கொண்டு சென்று ஒவ்வொரு வண்டியாகப் பார்ப்பதற்குள் வண்டி கிளம்பிவிட்டது. பின்னும் விடாது வேகமாக வண்டியுடன் ஓடிக்கொண்டே இரண்டாவது வகுப்பு வண்டியைக் கண்டு பிடித்துப் பார்க்கையில் அதில் மற்றொருபுறத்தில் ச்யாம்சுந்தரும் உட்கார்ந்திருக்கிறான். அங்குள்ள சோபாவில் ஒரு உருவம் படுத்திருப்பதாயும் அதை முற்றிலும் போர்த்திருப்பதாயும் தலைமயிர் மட்டும் தெரிவதால் அதிலிருந்து அவ்வுருவம் பெண்ணுருவம் என்றும் ஒரு நொடியில் தெரிந்துகொண்டான்; எனினும் வண்டி வேகமாகச் செல்வதால் நன்றாய்ப் பார்க்கக்கூடவில்லை. அங்கு கிடத்தப்பட்டுள்ள உருவம் ஓர் பெண்பிள்ளை என்பதை மட்டும் நன்றாகத் தெரிந்துகொண்டான். அவ்வாறு தெரிந்துகொண்டதால் இவனுடைய மனக்

---

புஸ்தகம் படிப்பதையும், போடுவதையும் தூஷிக்கும் மனிதர்களே அதை இரகசியமாக இரவல் வாங்கி படிக்கின்றார்கள். அவர்களின் அஜாக்ரதையினால் புஸ்தகம் கிழிந்துவிடவும், இரவல் கொடுத்தவருக்குப் புதிய புத்தகமாகக் கொடுப்பதற்கு வேறொரு மனிதர் மூலம் புதிய புத்தகம் வாங்க நேருகின்றது; அப்போது அவர்களுடைய இரகஸியமும் வெளியாகி விடுகின்றது. இதென்ன திருட்டுத்தனமோ தெரியவில்லை!

கலவரமும் திகிலும் அதிகரித்துவிட்டன. அந்த ஆள் சொல்லியதுபோல இரு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கிறார்கள். கிடத்தி இருப்பதும் பெண்பிள்ளையைப்போலவே இருக்கிறது. இந்த குறிப்புகளை எல்லாம் கவனித்தால் என் கண்மணியை இந்தப் பாவிகள்தான் அடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று தோன்றுகின்றதே! ஐயோ! என்ன செய்வேன்? என்ற பெருங் கவலையினால் அவனது தேகமே விலவிலத்துப்போயிற்று. அவன் கால்கள் தள்ளாடுகின்றன. இரயிலும் விசையாகக் கிளம்பிப் போவதால் அதோடு இவனால் ஓடுவதும் கூடாதுபோய்விட்டது. அவ்வண்டியிலேயே தானும் ஏறிக்கொள்ளலாம் என்று பார்த்தால் தனக்கு உதவி புரிவதற்காக வந்திருக்கும் மனிதனும், தன் மோட்டாரும் வெளியிலிருப்பதால் அவ்விதம் செய்வதும் கூடாது போய்விட்டது; ஆகையால் வண்டியிலிருப்பதுதான் சுலோசனா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு அடுத்த ஸ்டேஷனுக்கு வண்டியை விரைவில் விட்டுக்கொண்டு செல்வது என்று தீர்மானித்துப் பின் வெளியில் வந்தான். தன் மோட்டாரில் ஏறிக்கொண்டு அவ்வண்டி நிற்கப்போகும் பக்கத்து ஸ்டேஷனுக்கு மான் வேக மனோ வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான். இவன் ஸ்டேஷனை அடையும் முன்னர் ரயில் ஸ்டேஷனில் இரண்டு நிமிஷங்களும் நிற்காது ஓடிவிட்டது. அங்கு இனி செல்வது உபயோகமில்லை என்று எண்ணி உடனே அதற்கடுத்த ஸ்டேஷனை நோக்கிச் செல்லலானான். விமலநாதன் வந்த அவசரத்தில் காரில் பெட்ரோல் இருக்கின்றதா என்பதைக் கவனிக்காது வந்துவிட்டமையினால் அவன் பாதி வழியில் போகும்போது வண்டியில் பெட்ரோல் ஆகிவிட்டதால் வண்டியின் வேகம் குறைந்து வண்டி நிற்க ஆரம்பித்துவிட்டது. இதைக்கண்ட விமலநாதனுக்குண்டாகிய வருத்தத்திற்குச் சொல்லவேண்டுமோ! "ஐயோ! இன்று வருவதெல்லாம் இவ்விதம் ஆபத்தாயும் இடையூறாயும் இருக்கின்றனவே! என்ன சங்கடமிது. என் மனத்தைக்

---

எத்தனை ஜாக்ரதையாகப் புரூப் பார்த்தாலும் எவ்விதமோ பிழைகள் விழுந்திருப்பதை அச்சாகிய பிறகே காண நேருகின்றது. காரியம் கெட்டுவிட்ட பிறகு வருந்துவது போன்று இதிலும் நேருகின்றது.



210028

கடவுளறிந்தும் இவ்விதம் சோதிக்கலாகுமா? கண்மணி! சுலோசனு! உன்னை நான் தேடிப்பிடிக்க எண்ணி அலைகையில் இவ்விதம் பெட்ரோலுமா ஆய்விடவேண்டும்? ஐயோ! என்ன செய்வேன் கிருஷ்ணு! இப்போது நாம் என்ன செய்யலாம்? ரயில் இதற்குள் அடுத்த ஸ்டேஷனில் நின்றிருக்குமே! பெட்ரோல் போட்டாலன்றி வண்டி செல்லமாட்டாதே! இங்கு பெட்ரோல் எங்கு கிடைக்கும் தெரியவில்லையே! இனி வண்டி ஒரு பர்லாங்கு தூரங்கூட ஓடாது; இதைத் தள்ளிக்கொண்டு பெட்ரோல் இருக்கும் இடத்திற்குச் செல்வதற்கும் இந்த வேளையில் ஆள்கள் கிடைக்கமாட்டார்களே! ஆ! இதென்ன சோதனை!'' என்று தத்தளிக்கின்றான்.

அவனுடன் கூடவந்த கிருஷ்ணன் என்கிற சினேகிதனுக்கும் மிக்க வருத்தமாகிவிட்டது. அவன் விமலநாதனை நோக்கி, "சார்! இந்த ரோட்டில் அடிக்கடி வெளியூர்களுக்கு பஸ்கள் போகின்றன. ஆகையினால் இவ்விடத்தில் எங்கேனும் பெட்ரோல் விற்கக்கூடும்; நான் சென்று பார்த்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்.'' என்றான். அப்போது அங்கு எதிர்முகமாக ஓர் (ப்ரைவெட்) சொந்த மோட்டார் வருவதைக் கண்ட விமலநாதன் சடக்கென்று எழுந்து வண்டி வரும் வழியில் நின்று "சற்று நிறுத்துங்கள்.'' என்று கையைக் காட்டினன். உடனே அந்த வண்டி நின்றது. அதில் ஓர் பெரிய மனிதர் வீற்றிருந்தார். விமலநாதன் அவரை நோக்கி "ஐயா! நான் ஓர் முக்கிய காரியார்த்தமாக செங்கல்பட்டு வரையில் செல்லவேண்டியதாக இருக்கிறது. காரியம் வெகு அவசரமாகையினால் புறப்படும்போது நினைவில்லாமல் பெட்ரோல் போடாது வந்துவிட்டேன். இப்போது வண்டி நின்றுவிட்டது. தங்களிடமுள்ள ஒரு காலன் பெட்ரோல் கொடுத்தால் மிக்க உப

---

"எங்கள் வீட்டுக் கலியாணத்திற்கு நீங்கள் வந்து அங்கேயே இருக்கவில்லை'' என்பதைப் பற்றி சிலர் குற்றமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் "அவர்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு நாம் ஒரு வேளை கூட எட்டிப் பார்க்கவில்லையே; அன்பு நிறைந்த உள்ளத்தினர்களாகிய அவர்களின் மனம் எவ்விதம் தத்தளித்திருக்கும்?'' என்பதை சிறிதும் சிந்திப்பதே இல்லை.

காரம் செய்ததாகும். நீங்கள் வழியில் வாங்கிக்கொள்ளுங்கள்." என்று நிரம்பவும் வணக்கமாகக் கேட்டான்.

வந்த மனிதரும் தடை கூறாது தமது வண்டியில் தயாராக வைத்திருக்கும் பெட்ரோலைக் கொடுத்தார். அதை விமலநாதன் தனது வண்டியில் ஊற்றிப் பின் அந்த கனவானுக்கு அனேக உபசார வார்த்தைகளைக் கூறி பணத்தையும் கொடுத்து உத்தரவு பெற்றுக்கொண்டு வண்டியை வெகு விசையாக விட்டுக்கொண்டு அடுத்த ஸ்டேஷனை அடைந்தான். (இரயில்வே கைடு) அவனிடத்திலேயே இருப்பதால் 'இத்தனை நேரத்தில் வண்டி இந்த இடத்திலிருக்கும்' என்பதை அறிந்துகொண்டான். அந்த ஸ்டேஷனில் உள்ளவர்களை நோக்கி "இங்கு இரு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் மற்றொரு சிக்கான பெண்பிள்ளையை அழைத்துக்கொண்டு இப்போது சென்ற இரயிலில் இறங்கினார்களா!" என்று கேட்டான். அங்கிருந்த ஒரு போர்டர் "ஆமாம் சாமீ! அவர்கள் உங்களுக்கு வேண்டியவர்களா! நீங்கள் சொல்லியதுபோல ஒரு சிக்கு பெண்ணை தூக்கிக்கொண்டு இரு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும் வந்தார்கள். அவர்கள் மூட்டையை நான் தான் எடுத்துச் சென்று வண்டியில் வைத்தேன்" என்றான்.

அதைக் கேட்ட விமலநாதனுக்கு திடுக்கிட்டது. உடனே அந்த போர்டரை நோக்கி "அப்பா! அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். நான் அவர்களை அவசியம் பார்க்கவேண்டும். நீ எந்த வண்டியில் சாமான்களை ஏற்றினாயோ அந்த வண்டிக்காரனை அழைத்து அவர்கள் தங்கியுள்ள வீட்டைக் காட்டச் சொல்லு. உனக்குப் புண்ணிய முண்டு" என்று கூறி போர்டர் கையில் ஒரு ரூபாயை வைத்தான். உடனே அந்த போர்டர் "சாமி! இங்கேயே இருங்கள். நான் அவன் வீட்டிலிருக்கிறானா பார்க்கிறேன்" என்று

---

மிகவும் நேசமாக இருந்தவர்கள் பிரிந்து போன பிறகு அவர்களைக் கண்டு முன்போன்ற மன மகிழ்ச்சியுடன் பேசுவதென்றால் நம்மையறியாமலேயே ஏதோ ஒரு மாதிரியான மாறுதல்—குற்றமில்லாமலேயே, மனத்தில் குரூரமில்லாமலேயே—உண்டாகிவிடுகின்றது.

கூறிவிட்டு ஓட்டமாக ஓடினன்; 5 நிமிடத்தில் வண்டிக்காரனுடன் வந்து சேர்ந்தான். "சாமி! நீங்கள் கூடச் சென்ருல் இவன் வழி காட்டுவான்" என்ருன். உடனே வண்டிக்காரனையும் தன்னேடு மோட்டாரில் ஏற்றிக்கொண்டு அவன் காட்டிய வழியே சென்ருன். வண்டிக்காரன் சுட்டிக் காட்டிய வீட்டிற்கு சற்று தூரத்திலேயே தன் மோட்டாரை நிறுத்திவிட்டு வண்டிக்காரனுக்கும் ஒரு ரூபாயைத் தள்ளி அவனை அனுப்பிவிட்டு தன் மோட்டாரை தூரத்திலேயே நிறுத்திவிட்டு கிருஷ்ணனை வண்டியிலேயே உட்கார வைத்துத் தான் மட்டும் இறங்கி அந்த வீட்டிற்குச் சென்ருன். அங்கு வீதியில் ஒரு கிழவன் உட்கார்ந்து புலம்பிக்கொண்டிருந்தான், அவனைக் கண்ட விமலநாதன் அவனருகில் சென்று மெல்ல அவனை நோக்கி "பெரியவரே! ஏன் புலம்புகின்றீர்கள்?" என்ருன்.

அந்த கிழவனுக்கு இரு கண்களும் தெரியாதாகையால் விமலநாதனைத் தெரிந்துகொள்ள முடியாது போயிற்று; எனினும் தன்னிடம் யாரோ பேசுகின்றதை மட்டு மறிந்து தன் புலம்பலை நிறுத்திவிட்டு "யாரது? என்னுடன் பேசுவது கோபாலனு! ஊரிலிருந்து இப்போது தான் வருகிருயா?" என்ருன்.

இது கேட்ட விமலநாதன் "பெரியவரே! நான் கோபாலனல்ல. நான் வெளியூர் ஆசாமி. இங்கு இரவு தங்குவதற்கு இடம் கிடைக்குமா! என்று கேட்க வந்தேன். நான் வியாபவாதித் தொழில் செய்பவன்; இங்கு தாங்கள் புலம்பியதால் என்ன விசேஷம் என்று கேட்டேன்." என்ருன்

கிழவ:—ஐயோ! இந்த சமயம் நான் என்ன சொல்வேன்? என் வயிறு எரியும் வேளையாய் விட்டதே! என் பேத்தி இறந்து விட்டாளப்பா! அதனல் புலம்புகின்றேன்.

---

அந்தரங்கத்திலுள்ள அன்பையும், விஷயங்களையும், ரகஸியங்களையும் மூடகமாக வெளியிட்டாலும் அதில் சம்மந்தமுள்ளவர்களின் மனம் சடக்கென்று அறிந்துகொண்டு அதற்கு ஏற்றவாறு இன்பமும் துன்பமும் அடைகின்றது.

விமல:—ஆகா! உமது பேத்தியா! இப்போது ரயிலிலிருந்து கோபாளியாக இருவர் தூக்கிக்கொண்டு வந்தார்களே! அவர்களா! என்ன உடம்பு? ஐயோ பாவம்; மிகவும் வருத்தமாக இருக்கிறது.

கிழவன்:—ஐயா! எனக்கு வருத்தமேது? எல்லாம் தீர்ந்து விட்டது. எனக்கிருப்பது ஒரே பெண். அவள் ஒரு குழந்தையைப் பெற்று உயிர் நீத்தாள். அந்த துக்கத்தில் என் கண் பாதியும் அவிந்துவிட்டது. அந்த குழந்தையை நானே எடுத்து வளர்த்தேன்; விவாகமும் செய்து கொடுத்தேன். விவாகமான 5-வது நாளே அந்தப் பாவி உயிர் துறந்து என் குழந்தையைப் பாழாக்கி விட்டுச் சென்றான். அந்த தீராத விசனத்தினால் புலம்பி என் இருவிழிகளும் அவிந்துவிட்டன. அந்த பெண் மகா புத்திசாலி. மகாரூபவதி; விவேகி. அவளுக்கு அப்போது சிறு வயதாதலால் துக்கம் தெரியவில்லை. பிறகு செல்லச்செல்ல அவளை விசனம் கப்பிக்கொண்டது. அன்னத்தை வெறுத்தாள். அவளுடைய 15 வயதிற்குள் சன்யாசியைப்போன்று ஆய்விட்டாள். இந்த வீட்டைவிட்டு வெளியிலும் வருவதில்லை. "தாதா! உனக்காக நான் உயிர் வைத்திருக்கிறேன்" என்று அடிக்கடி கூறுவாள். குழந்தையின் வயிற்றெரிச்சலைக் கண்டு சகியாமல் அவளுக்கு மறு விவாகம் செய்துவிடலாமா என்று நினைத்தேன். குழந்தை தனிமையில் உட்கார்ந்து புலம்புவதைக் கண்டு என்னால் தாங்கமுடியாமல் போய்விட்டது. குழந்தை எத்தனை வைராக்யத்தை அடைந்திருப்பினும் பருவ காலத்தின் சேஷ்டையும் அவளைத் தாக்கியது. போதாக் காலத்திற்கு அவளை அவளுடைய அத்தை வந்து அழைத்துச் சென்றாள். அன்பாக நடத்துவதுபோக அவளை தன் வீட்டு வேலைக்காரியைப் போன்று நடத்த வாரம்பித்தாளாம். அறுத்த முண்டைக்கு இதென்ன! விதவைக்கு வேடிக்கை என்ன! என்று மிகவும் இளக்

---

நம் மனத்திலுள்ள விஷயங்களை நமக்கு மிகவும் வேண்டியவர்களுக்கு நேரில் தெரிவித்துவிடுவதைவிட பூடகமான மார்க்கத்தில் நமது இருதயத்திலுள்ள அன்பைத் தெரிவிப்பது ஒரு மாதிரியான இன்பமாக இருக்கிறது. அதை வித்யாசமாக சிலர் நினைக்கலாம். ஆனால் அவ்விதம் நினைப்பது சரியல்ல.

கரமாகப் பேசவாரம்பித்தாளாம். இச்சுடுசொற்களைத் தாங்கமாட்டாத என் குழந்தை. உலகில் ஒருவிதத்திலும் அகப்படாத இக்கட்டை இனி இருந்தென்ன; இறந்தென்ன!'' என்று எண்ணி ஏதோ கொடிய மருந்தைத் தின்றுவிட்டாளாம். அதனால் உடனே மயக்கமாக விழுந்துவிட்டதைக் கண்ட அவள் அத்தை, அத்தை புருஷன், அவனுடைய தம்பி ஆகிய மூவரும் அவளை இங்கு கொண்டு வந்துவிட்டார்கள். வந்த வுடனே என் குழந்தையின் உயிரும் நீக்கிவிட்டது. ஐயோ! என்னை முற்றிலும் பரதேசியாக்கிவிட்டு என் கிளி பறந்துவிட்டதே! ஒரு நாளும் சுகமென்பதை யறியாது குழந்தை மாண்டுவிட்டதே! நான் அப்போதே அதற்கு மறுமணத்தைச் செய்திருப்பின் இவ்விதம் தற்கொலை செய்துகொள்ளவேண்டாமல்லவா!'' என்று கிழவன் புலம்பினன்.

இவைகளை எல்லாம் கேட்ட விமலநாதன் வயிற்றில் பகீர் என்றது. இத்தகைய வசை மொழிகளைத் தாங்காது நம் சுலோசனவும் தற்கொலை செய்துகொள்வாளோ! ஐயோ! என்ன செய்வேன்? இங்கு வந்தும் நமக்கு ஒன்றும் சம்மந்த மில்லாது போய்விட்டதே! இத்தனை நேரம் அந்த வண்டி எங்கு சென்றிருக்குமோ! அந்தப் பாவிகள் எங்கிருப்பார்களோ! நாம் இங்கு நமது கண்மணியைக் கண்டுவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டே வந்தும், இவ்விடத்திலும் மனத்தை வருத்தக் கூடிய ஓர் பெரும் சங்கடமான செய்தியே காதில் பட்டதே!'' என்று நிரம்பவும் விசனத்தை யடைந்து அங்கு உத்தரவு பெற்றுக்கொண்டு தன் மோட்டார் நிற்கு மிடத்திற்கு வந்து அங்கு நடந்த விஷயங்களைத் தெரிவித்துப் பின் ரயில்வே கைடை எடுத்துப் பார்த்தான். அந்த நேரத்திற்கு ரயில் பலான ஸ்டேஷனில் நிற்கு மென்று தெரிந்துகொண்டான். உடனே வண்டியை இது வரையில் ரயில் நின்ற ஸ்டேஷன்களுக்குக் கொண்டு சென்று அவ்விடங்களிலும்

---

குடும்பத் தொல்லை யொருபுறம்; வேலையின் கொடுமை யொருபுறம். எல்லாவற்றையும் விட நமது உயிரையே ஓர் சிநேகிதையிடம் வைத்து ஏமாற்றத்தை யடையும் சங்கடம் மற்றொரு புறம். இதை இறந்தாலும் மறக்க வியலாது.

இந்த ஸ்டேஷனில் கேட்டது போன்று விசாரித்ததில் ஒன்றும் தகவலே தெரியவில்லை. விமலநாதனுடைய குழப்பமும் கவலையும் அதிகரித்துவிட்டன. அதனால் அவன் கலங்கியபடியே ரயிலைத் தொடர்ந்தே செல்வதென்று தீர்மானித்து அதோடு வண்டியை வெகு வேகமாக விட்டுக்கொண்டு சென்றான். இவனுடைய போதாக் காலத்தின் பலனாக வண்டியின் டயர் திடீரென்று பங்ச்சராகி விட்டது. அதைக் கண்ட விமலநாதனுடைய தவிப்பைக் கூறவேண்டுமா! "ஐயோ! இன்று நான் எந்த நேரத்தில் வீட்டை விட்டுக் கிளம்பினேனோ தெரியவில்லையே! இன்று தானா இந்த டயர் பஞ்சராக வேண்டும்?" என்று மிக்க வருத்தத்துடன் வண்டியில் தயாராக இருந்த வேறொரு டயரை எடுத்து அதை சக்கரத்தில் மிகவும் சிரமப்பட்டுப் பூட்டிப் பின் வண்டியை விடத் தொடங்கினான். அந்த டயர் போடுவதற்கு நேரம் அதிகமாகிவிட்டதால் உடனே அந்த மணிக்கு வண்டி நிற்குமிடத்திற்குச் சென்றுபார்ப்பதென்று எண்ணி வெகு விரைவில் ஸ்டேஷனை அடைந்தான். தன்னுடன் வந்திருப்பவனை நோக்கி "க்ருஷ்ணா! நான் ஸ்டேஷனுக்குள் சென்று வருகிறேன். வண்டியில் அந்தச் சண்டாளர்கள் இருந்தால் நான் உடனே அவர்களுடன் அந்த இரயிலில் ஏறிக்கொள்கிறேன்; ரயில் புறப்பட்டபிறகு நான் வராவிட்டால் நீ மோட்டாருடன் வீட்டிற்குப் போய்விடு. இச் செய்தியை யாரிடமும் தெரிவிக்காதே. காரை ஷெட்டில் விட்டு விட்டு நீ உன் வீட்டிற்குப் போய் விடு. நான் விஷயத்தைத் தெரிந்துகொண்டு பிறகு வருகிறேன்" என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக ஸ்டேஷனுக்குள் சென்றான்.

இவன் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் ரயில் அங்கு வந்தது. உடனே விமலநாதன் தன் அங்க வஸ்திரத்தினால் முக்காடிட்டுக்கொண்டு வண்டியின் முன் பக்கமுள்ள இரண்டாவது வகுப்பு வண்டியைத் தேடிச் சென்றான். ஒவ்வொரு வண்டியாகப்

---

பிரிந்த சினேகிதர்களை நினைக்குந்தோறும் வயிற்றில் பகீர் பகீர் என்கிறது. "அப்பப்ப! இனி உலகத்தில் யாருடனும் ஆப்தமான சினேகமே செய்ய வேண்டாம். சினேகிதரைப் பிரிந்து நான் படுந்துன்பம் போதும்; போதும்" என்று நொந்து புண்பட்ட மனத்துடைய கங்கை தெரிவிக்கின்றாள்.

பார்த்துக்கொண்டே வந்தான். இவன் முன்னர் கண்டது போலவே அண்ணுசாமியும் காவேரியும் அப்போது வெகு குதூகலத்துடன் ஏதோ புசித்துக்கொண்டிருந்ததைக் கண்ட விமலநாதன் சந்தோஷமடைந்து அவ்வண்டியை நன்ருக உற்றுப்பார்த்தான். முன்போலவே அங்கு ஒரு மாது படுத்திருந்ததும் கண்டான். அடங்காத சந்தோஷத்துடன் அந்த வண்டிக்குப் பக்கத்து வண்டியிலேயே விமலநாதன் ஏற எண்ணி உடனே ஓடி டிக்கட்டு வாங்கிக்கொண்டு அதில் வந்தமர்ந்தான்; வண்டியும் கிளம்பிவிட்டது அடுத்த ஸ்டேஷனுகிய கூடுவாஞ்சேரியில் வண்டி வந்து நின்றது. உடனே வண்டியிலிருந்து யாரேனும் இறங்குகின்ருர்களா! வென்று விமலநாதன் பார்த்தான். அப்போது அண்ணுசாமி இரங்கியதை நோக்கிய விமலநாதன், தானும் அம் முக்காடுடன் இறங்கினுன். அண்ணுசாமி, காவேரி, ச்யாம்சுந்தர் மூவரும் இறங்கி வண்டியில் படுத்திருந்த மாதை சால்வையினுல் போர்த்து மெல்ல இருவரும் பிடித்துத் தூக்கிக்கொண்டு நேரே ஸ்டேஷனுக்கு வெளியில் வந்தார்கள். அங்கு தயாராக நின்றுகொண்டிருந்த ஒரு பெரிய மாட்டு வண்டியில் அந்த நோயாளியைக் கிடத்திப் பின் தாங்களும் அமர்ந்தார்கள்.

அந்த வண்டிக்காரன் வண்டியின் விளக்கை ஏற்றும் பொருட்டு மடியிலிருந்த வத்திப் பெட்டியைப் பார்த்தான். அதில் நாலைந்து வத்திகளே இருந்தமையால் அவைகளைக் கிறியும் காற்றில் அணைந்துவிட்டன. அதனுல் அவன் "சாமி! இருங்கள்; நான் வத்திப் பெட்டி வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று கூறி ஸ்டேஷனிலிருக்கும் வெத்திலைப் பாக்குக் கடைக்கு ஓடினுன். இதை நமது விமலநாதன் தூரத்திலிருந்தபடி கவனித்துக்கொண்டிருந்தானுகையினுல் அவன் சென்ற கடையின் பக்கம் தானும் சென்று நின்ருன். வண்டிக்காரன் வத்திப்பெட்டியை வாங்கிக்கொண்டு

---

எந்த குடும்பத்தைக் கவனித்தபோதிலும் ஒரு விநோதம் இருக்கின்றது. புருஷன் மனைவிகளுக்குப் பரஸ்பரம் தெரியாத எத்தனையோ விஷயங்கள் கிளம்புகின்றன. இது ஒரு பெரிய வேடிக்கை.

# பொங்கலோ! பொங்கல்!!

பாமாலையைப் பாடிக் கொடுத்தும், பூமாலையைச் சூடிக் கொடுத்தும், மார்கழி மதியில் மங்கையர் பலருடன் மகிழ்ந்து, மங்களகரமாய் ப்ராதக் காலத்தில் கங்கையில் நீராடி, எங்கும் நிறைந்தோனையும், மங்கள ரூபனையும், பொங்கும் புகழ் பிரதாபனையும், வனமாலை தங்கும் மார்பினனையும், சங்கு சக்கர தாரியாயும், பார்த்தனுக்குக் கீதை உரைத்த பரமனையும், கரமலரில் கோல் கொண்டு கானகத்தில் ஆனிரை மேய்த்த கருமா மணியாயும், அன்பர்க்கு அன்பனையும் விளங்குகிற எமது இறைவன் ஸ்ரீ பார்த்தசாரதியையே தனது பதியாக அடைந்து மாலையிடவேண்டுமென்ற மனக் கருத்துடன்: நோன்பு நோற்ற, பூங்கோதை, உள்ளக்களிப்புடன் உவந்து புனிதமாய் மாலையிட்ட, இம்மார்கழித் திங்களின் பெருமையை எடுத்துக்கூற வல்லார் யாவர்? அத்தகைய சூடிக்கொடுத்த சுடரொளி நாச்சியாரும் எம்பெருமானும் கூடிக் களித்து சுகாநந்த போகிகளாயிருந்து விளங்கும் போகிப் பண்டிகையும், அதற்கு அடுத்த நாள் அவர்கள் ஆநந்தமயமாகப் பொங்கிக் களித்து அடியவர்களுக்கு அபயப்பிரதானம் அளித்து ரக்ஷிக்கும் பொங்கல் பண்டிகையும் யாவர்க்கும் வெகு மங்களகரமாயும், இன்பந்தருவதாயும, இருக்கவேண்டுமென்று எல்லாம்வல்ல எம்பிரானது சரணகமலங்களில் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

நிகழும் ஆண்டில், வருணதேவனும், வாயுதேவனும் ஒருங்கு சேர்ந்து அநேக இடங்களில் தமது சுய ஆட்சியை புரிந்து அதன் பலனைக் காட்டிவிட்டனர். இனி, புதிய ஆண்டிலேனும் இத்தகைய கஷ்டங்கள் நேரிடாவண்ணம் காத்தருளுமாறு இறைவனை வேண்டுகின்றனம். நிற்க,

மேன்மை தங்கிய நமது மன்னர்பிரானது புதிய வருடப் பிறப்பன்று, தம் தம் அன்பர்களுக்குப் பரிசு அளிப்பதென்றும், ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியோடு கூடிய மனத்துடன் சந்திப்பதென்னும் வழக்கம் அநேக இடங்களில் நடந்தேறி வருகின்றது. இப்புதிய வருடத்தில் நமது சந்தா நேயர்கள் எல்லோரும் தமது அருமைக் குழந்தையாகிய மோகினிச் செல்விக்கு ஒவ்வொரு புதிய சந்தாவைச் சேர்த்துப் பரிசாக அனுப்புவீர்கள் என்று மோகினிச் செல்வி மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கின்றனள்.

இதுகாறும் நமது சந்தா நேயர்களிற் பெரும்பாலார் தமது சந்தாத் தொகையை யனுப்பி மோகினியைச் சிறப்புடன் விளங்கச் செய்தமைக்கு எமது வந்தன பூர்வகமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அநேகமாக, புதிய தொரு ஆபரணத்தைச் செய்துகொண்டாலும், அழகியதொரு சேலையை வாங்கிக்கொண்டாலும், அவற்றைத் தமக்கு வேண்டிய மற்றவர்களிடத்திலும் காண்பித்து, அவர்களை வாங்கிக்கொள்ளச் செய்வது பெரும்பாலும் பெண்மணிகளிடத்தில் அனுபவமாக நடைபெற்று வருவதொரு விஷயம். அதைப் போலவே ஒவ்வொரு சகோதரியும் தமது சிநேகிதர்களுக்குச் சிபார்சு செய்வதோடு மோகினிக் குழுவியைத் தாமும் வரவழைத்துக் கொள்ளுமாறு செய்யவேண்டுமென கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொங்கல் களிப்பு தங்குக வெங்கும்
மாதவனின் அருள் எதமில் ஒளிருக
ஈசனின் நேசம் ஆசற வீசும்
பேதகமின்றிப் பூதல முற்றும்
பாவிக் காக்கும் பற்றினை ஒழிக்கும்
ஐயன் அருளே மெய்யோடு நிலவுக.

வை. மு. கோதைநாயகி

## எட்டாவது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

இம்மாதம் 20-தேதிக்குள் பணமனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. |
|---|---|---|
| 1 | 25 | M. 15. Mr. M. R. Murthi, Kualalumpur. |
| 2 | 15 | V. 20. Mr. S. Velayudham, Nadi. |
| 3 | 10 | R. 59. Mr. E. D. Raja Rao, Karur. |
| 4 | 5 | G. 55. Srimathi Gowri Ammal, Bolarum. |
| 5 | 5 | D. 26. Mr. S. G. Dastagir Saib, Singapore. |
| 6 | 5 | S. 15. Srimathi Sona Bai., |

1931ஆம் ஜனவரி மீ 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கப்படும்.

1-வது பரிசு ரூ. 15.
2-வது பரிசு ரூ. 10.
3 வது பரிசு ரூ. 5.
4-வது பரிசு ரூ. 5.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

நாவல் உலகில் நவீனத்தில் நவீனமாகத் தோன்றி

இருக்கும் நவரச அலங்கார நாவல்!

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

# ருக்மிணீகாந்தன்

அல்லது

## ஆபத்தில் காக்கும் அன்பர்கள்

(அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது)

| | | |
|---|---|---|
| அலங்கார நடை! அதிசயக் கதை! அபூர்வ சம்பவம்! | ஆனந்தம்! ஆச்சர்யம்! ஆண்மை! | இனிய மொழி! இன்பரசம்! இணையிலாக்கற்பனை! |

இவை ஒருங்கு அமைந்து படிப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யும் உன்னத துப்பறியும் நாவல்.

**புத்தகப் படிப்பால் நீங்கள் எதையறிய ஆசைப்படுகிறீர்கள்?**

**கற்பனா சக்தியால் வர்ணிக்கப் படக்கூடியவை எவை?**

**சிருங்காரம்!, ஆச்சர்யம்!, வீரம்!, வைராக்கியம்!, ஹாஸ்யம்!, காதல்!, ரௌத்திரம்!, சோகம்!, சமத்காரம்!**

இந்த நவரச அலங்காரங்களும் அமைந்த புத்தகமே படிப்பவர் மனதைப் பரவசமாக்கக் கூடியது. ஆதலால் உடனே இந்த ஒப்புயர்வற்ற உயரிய நாவலை வாங்கி வாசித்து அதிலுள்ள அதிசய ஆனந்தக் கற்பனா வினோதத்தைப் படித்து மகிழுங்கள்!

இக்கதையின் முக்கியமான சாராம்சம்: பணத்தையொன்றையே எதிர்பார்க்கும் குணமற்ற கொள்ளிகள், உற்றார், உறவினர், உடன்பிறப்பு, சிநேகிதர் என்கிற ஒரு விதமான பந்தமும் இல்லாது எத்தகைய தீய தொழில் வேண்டுமாயினும் செய்து பணம் தேடுவதையே நாட்டமாகக் கொண்டு அலையும் வினோதத்தை நன்றாக எடுத்து காட்டியிருக்கிறது.

**இணையிலா இன்பம் எங்கே என்றால்?**

**ருக்மிணீகாந்தனைப்** படித்தால் நீங்கள் அறியலாம்.

15 அழகிய அத்தியாயங்களைக் கொண்டது விலை ரூ. 2-0-0

"ஜகன்மோகினி" சந்தா நேயர்களுக்கு விலை ரூ 1-12-0

**வத்ஸா கம்பெனி,— திருவல்லிக்கேணி.**

# புதிய சந்தா நேயர்கள்

தற்போது ரூ. 1-8-0 அனுப்புவோருக்கு நாம் இவ் வாண்டின் முதல் இதழிலிருந்து அனுப்புகிறோம். அவர்களுக்கு "சாமளநாதன்" முந்திய ஆறு இதழ்கள் வேண்டியிருப்பின் அவற்றிற்காக அணா-12 ஸ்டாம்பாகவோ, முன் பணமாகவோ அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். வி. பியில் அனுப்புவதால் 5-அணா அதிக செலவுண்டாகும்.

## ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும்போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்வதில்லையாகையால், மற்றவற்றை அனுப்ப முடியாதென்று எழுதவேண்டி யிருக்கிறது. அநேக நேயர்கள், தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தகசாலையினின்றும் வரவழைப்பதென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரியத்தையும் உத்தேசித்து இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கி யனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விவரமும், அவற்றின் முழு கிரயமும் முன் பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியு மாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நாலணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பியில் அனுப்ப முடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தா நேயர்கள், தங்களுக்கு வேண்டிய சகல புத்தகங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலுமின்றி பெற்றுக்கொள்ள முடியு மென்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்.

மானேஜர்.



திரும்புகையில் விமலநாதன் அவனை வழி மறித்து 'அப்பா! அந்த வண்டி அவர்களின் சொந்த வண்டியா; உனது வண்டியா!" என்றான்.

வண்டி:—ஏஞ்சாமி! என் வண்டிதான். எதற்குக் கேட்கிறீர்கள்?

விமல:—நான் ஊருக்குள் செல்லவேண்டும். என்னையும் அவ் வண்டியிலேயே ஏற்றிக்கொள்வாயா என்பதற்குக்கேட்கிறேன்.

வண்டி:—ஆ! அவர்கள் சம்மதிப்பார்களோ, மாட்டார்களோ! கூலிக்குப் பேசியாகிவிட்டதே!

விமல:—அப்பா! நான் மிகவும் அவசரமாகப் போகவேண்டும். இங்கு வேறு வண்டியும் காணப்படவில்லை. உனக்கு நான் அவர்கள் கொடுக்கும் சத்தத்தை விட அதிகமாகத் தருகிறேன். இதோ இந்த 10 ரூபாய் நோட்டைப் பெற்றுக்கொள். நீ என்னைக் கூலிக்கு ஏற்றியதாகச் சொல்லாதே! உன்னுடைய சொந்த மனிதன் என்றும், வீட்டிற்கு அழைத்துச் செல்வதாயும் கூறிவிடு. பிறகு அவர்கள் ஒன்றும் சொல்லமாட்டார்கள். நான் நன்றாக முக்காடிட்டுக்கொள்கிறேன். நீ வண்டியில் ஏறியதும், "தம்பி! இந்த ஜோத்தோடே எப்படி வந்தே!" என்று கேளு; நான் அதற்கு தக்க விடை யளிக்கின்றேன்." என்றான்.

பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும் என்கிற பழமொழி வீணாகி விடுமா! பணத்தின் மகிமை ஒன்றா இரண்டா! பணம் செய்யும் நன்மையும், தீமையும் கூறச் சாத்யமா! ஏராளமாகக்குவிந்து கிடக்கும் பணக்காரர்களே பணத்தின் ஆசையினால் பறப்பது கொஞ்ச மன்று. பணத்தைக் கண்ணில் காண்பதற்கும் பஞ்சமா யுள்ள ஏழைகள் அதற்கு மயங்கி அடிமையாவதற்குக் கேட்க வேண்டுமா! பட்டணங்களிலேயே வண்டிக்காரனின் பிழைப்பு திண்டாட்டமாயிருக்கையில் அந்த நாட்டுப்புறத்தில் வண்டிக்காரன்

---

"செல்வச் சீமாட்டி" என்கிற பதத்தை எந்த புத்தகத்தில் பார்த்த போதிலும் என்னையறியாது ஏதோ ஒருவிதமான நிலைமை உண்டாகிவிடுகிறது. பழங்கதைகள் நினைவிற்கு வருகின்றன. என்னைப் பிரிந்த சினேகிதர்களின் நினைவு வருகின்றது. இது என்ன வினோதம்." என்கிறாள் ஒரு பெண்.

பிழைக்கும் வழியும் வருமானமும் உண்டா! இந்த 10 ரூபாய் நோட்டைப் பார்த்தவுடனே அவன் மனம் அடைந்த ஆநந்தத்திற் கோர் எல்லேயே இல்லை. ரூபாயை மடியில் சொருகிக்கொண்டு அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டான். விமலநாதனும் முக்காடுடன், மெல்ல நடக்கமாட்டாமல் தத்தளித்தவாறு வண்டிக்காரனுடன் வந்தான். வண்டிக்காரன் "என்டாப்பா! தம்பி! இத்தினி ஜொரத்திலே என்டா வந்தே! காயுதெப்பா! ஒடம்பு நல்லா மூடிக்கோ! ஐயோ! எத்தினி நாளா ஜொரம் அடிக்குது." என்று வெகு அனுதாபத்துடன் கேட்டான்.

இதைக் கேட்ட விமலநாதன் "அண்ணே! 10 நாளா காயுதுங்க டாக்குட்டரு மருந்துங்க தின்னேன்; கொணமில்லிங்க. நம்ம நாட்டு வயித்தியக்காரங்கிட்டே பாக்கலாமுன்னு வந்துட்டேன். ஹா! தலேவலி, கயுத்துவலி; அப்பா! உயிரு போவுதே!" என்று மிகவும் பொருத்தமாக நடித்துப் பேசினன்.

வண்டி:—அட எம்மவனே! இப்படி இந்த வண்டியிலே ஒக்காருடாப்பா. நடக்காதே; நானு இவங்களே எறக்கிப்புட்டு ஒன்னெ வூட்டுக்கு இட்டுகினு போறேண்டாப்பா—என்று கூறி அவனே வண்டியின் முன்பக்கத்திலே உட்காரச் செய்துப் பின் வண்டியிலிருப்பவர்களே நோக்கி "சாமி! தயவுசெய்து இவனே வண்டியில் ஏத்திக்க உத்தரவு கொடுக்கணும். காயலா வந்துட்டானுங்க" என்று தடபுடலாகக் கெஞ்சியதால் அவர்கள் சம்மதித்தார்கள். விமலநாதனும் வண்டியின் முன்பக்கத்தி லமர்ந்துகொண்டு "ஐயோ! யம்மாடீ! தலே வலிக்குதே!" என்று அரற்றிக்கொண்டே வருகிறுன். சற்று ஆற்றுவதும் மற்ற வேளேயில் அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்று கவனிப்பதுமாக இருக்கிறுன். வண்டியினுள்ளிருக்கும் காவேரி அண்ணுசாமியை நோக்கி இன்று நமது கார் கெட்டுவிட்

---

ஒருவருடைய உண்மையான ஜீவிய சரிதையைக் கேட்கும்போது மனம் பலவித உணர்ச்சிகளுக்கு இலக்காகிவிடுகின்றது. "ஐயோ! இத்தனே கஷ்டங்களே எவ்விதந்தான் அனுபவித்தார்களோ!" என்கிற வியப்பும் பரிதாபமும் தானே மனத்தில் எழுகின்றன. கற்பனேக் கதைகளே விட உண்மையாக அனுபவத்தில் காணும் விஷயங்களேக் கொண்ட கதைகளுக்கே ஒரு தனி ருசி.

டதனால் லொடபட என்று இந்த மாட்டு வண்டியில் ஆடி ஆடிச் செல்லவேண்டி இருக்கிறது. தேகம் முற்றும் வலிக்கின்றது. இன்னும் வெகு தூரம் போகவேண்டுமே! என்ன செய்வது?" என்றாள்.

அண்ணு:—உனக்கு உடம்பு வலித்தால் நான் பிடித்துவிடுகிறேன். இப்போது நாம் நடிக்கப்போகும் ஸ்வாரஸ்யத்தில் ஒருவித வலியும் நிற்காதல்லவா!

ச்யாம்சுந்தர்:—காவேரி! நாம் இப்போது சுலோசனு என்கிற கதையை நடிக்கப்போகிறோமே! அதில் கதா நாயகியாகிய சுலோசனுவின் வேடத்தில் நமது சுலோசனுவே நடித்துவிட்டால் நம்முடைய புகழும் கீர்த்தியும் கூறவேண்டுமோ! அந்த ஒரே ஒரு நாடகத்திலிருந்து நாம் குபேரனுக்கு இணையாகிவிடலாம். நாம் செய்திருக்கும் ப்ரயத்தனத்தில் முக்கால் பங்கும் பலித்துவிட்டது. இன்னும் கால் பங்குதான் இருக்கிறது. அப்போது உன்னிஷ்டப்படிக்கு உன்னை வைர ஆபரண பூஷிதை யாக்கிவிடுகிறேன்--என்றான் அவர்கள் பேசுவது விமலநாதனின் இருதயத்தைத் துளைக்கின்றது.

அண்ணு:—என்ன சார்! சுலோசனுவை நான் என்றைக்கோ தூக்கிக்கொண்டு வந்திருப்பேன். அந்த வக்கீல் பயல் விமலநாதனிருக்கிறானே! அவனுடைய தைரியம் அவளுக்குப் பூர்ணமாக இருப்பதால் அவள் தலை துள்ளுகிறாள். சமயம் நமக்கு வாய்க்காமலேயே இருந்தது.

காவேரி:—ஆமாம்! அந்த மனிதனின் தைரியத்தினால் அவளுக்கு என்ன கொழுப்பு தெரியுமா! அவனையே அவள் ஓர் பெரிய கவர்னராக எண்ணி இருக்கிறாள். அவனிருக்கையில் நமக்கென்ன குறைவு என்கிற திமிர் அவளைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அவள் கொழுப்பை நாம் சரியானபடி அடக்கவேண்டும்.

ச்யாம்சுந்தர்:—அடக்குவதாவது! இனி அடக்கிவிட்டமாதிரி தான். நாம் இந்த பக்கத்திலுள்ள காடுகளை நன்றாகப் பார்த்துக்

---

எந்த விஷயத்தையும் தான் கண்டு அனுபவிக்காதவரையில் அதில் ஒருவித பற்றோ, ருசியோ, பிடிப்போ ஏற்படுவதில்லை, கண்டனுபவித்த பிறகு தான் தனித்த சுவை உண்டாகின்றது.

[stamp]

கொண்டு சென்று இந்த கதையை இவ்விடத்திலேயே நடிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இப்போது அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். இந்த இடமே நமக்கு நன்றாகப் பிடித்துவிட்டால் நாம் இவ்விடத்திலேயே இருக்கலாம்.

அண்ணா:—அதெல்லாம் சரிதான்; என்னைப் பலவிதத்திலும் அவமானப்படுத்திய அந்த விமலநாதப் பயலுக்கு ஏதேனும் சரியான வழியில் மரியாதை செய்து அவன் கொழுப்பை படக்கி அவனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும். அதுவும் என் மனத்தில் இருக்கிறது. அதற்கு என்ன வழி செய்யலாம்?

காவேரி:—உம். இவ்வளவுதானா உங்கள் மூளை. அவனுடைய உயிர் நிலை எங்கிருக்கிறதென்றால் சுலோசனாவினிடத்தி லிருக்கிறது. அவளையே அவன் இழந்துவிடும் கஷ்டம் ஒன்று போதாதா! அதோடு அவன் உயிரும் பரலோகத்திற்குப் போய்விடும் என்று நினைக்கிறேன்.

ச்யாம்:—சீச்சீ! அப்படி நடக்காது. அவளைப் பிரிந்த பிரிவாற்றாத் துயரத்தினால் அவனும் ஒருகால் நம் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி இந்த கம்பெனியிலேயே வந்து சேருவான். அவள் இறந்துவிடுவதாயின் அவன் உயிரும் போகலாம். அவள் கல்லு போல இருக்கையில் அவன் அவளை அடைய எண்ணுவானேயன்றி விட்டுவிட்டு உயிர் துறப்பானா என்ன! அது ஒருபோதுமில்லை. அவனுடைய மதியே அப்போது மங்கிவிடும். அவ்வாறு அவனும் வந்து சேர்ந்துவிட்டால் அவர்களிருவரும் ஒன்றாகவே ஸ்திரீ புருட வேடத்தில் நடிக்கட்டும். நமக்கு படம் எடுப்பதுதானே முக்கியம். அவனும் ஆசாமி நல்ல அழகு. கட்டுமத்தான சரீரத்தை யுடையவன். நன்றாகப் படித்த விவேகி. அவன் நமது அதிர்ஷ்ட வசத்தினால் கிடைத்துவிட்டா னென்றால் பிறகு நமக்கென்ன குறைவு? பலவிதத்திலும் அனுகூலமாகிவிடும். சுலோசனாவின் அழகை விரும்பி பல

---

எப்போதும் சிடுசிடுப்பான முகத்துடனேயே சிலர் பேசுகிறார்கள். அவர்களைக் கண்ட பிறர் பயந்து நடுங்கும்படியாயும் ஆய்விடுகிறது. ஆனால் சிடுசிடுப்புள்ள சிலரிடத்தில் உடனே சாந்தம் தானாக உண்டாகிவிடுகின்றது.

ஆண்பிள்ளைகளும், விமலநாதனின் எழிலைக்கோரி அனேக பெண் பிள்ளைகளும் தாமாக வந்து சேர்ந்துவிடுவார்கள். நமக்கு அவ்வாறான சமயம் நேர்ந்துவிட்டால் ஒரு சிறிதும் கஷ்டமே இல்லை. நாம் கஷ்டப்பட்டு வலை வீசி ஆட்களைச் சேர்க்கிறோம்; அப்போது தாமாகவே பலர் சேர்ந்துவிடுவார்கள்.

அண்ணு:—ஆமாம்; ஆமாம்; அது நிரம்பவும் சரியான யுக்தி தான். அவ்விதம் நடந்துவிட்டால் நமக்கு ஒருவிதத்திலும் குறைவே கிடையாது. அவ்விருவர்களின் கொழுப்பை யடக்குவதற்கு இது தான் வழி—என்று இவர்கள் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கையில் வீடுகள் நிறைந்த தெருவு வந்தது. அந்தத் தெருக்கோடியிலிருந்த ஓர் சத்திரத்தில் வண்டியை நிறுத்தச் சொன்னுர்கள். உடனே வண்டி நின்றது வண்டியிலிருந்து அவர்கள் இறங்கி அங்கு படுத்திருந்த உருவத்தைத் தூக்கிக்கொண்டுபோய் உள்ளே படுக்கவைத்தார்கள். வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுர்கள். வண்டி பின்னும் கொஞ்சதூரம் சென்றதும் விமலநாதன் அதனின்றும் இறங்கி வண்டிக்காரனை யனுப்பினுன். தனது வைரக் கடுக்கன், மோதிரம், ரிஸ்ட் வாட்ச் முதலியவற்றைக் கழற்றி கைக்குட்டையில் முடிந்து அதை இடுப்பில் வேஷ்டியில் முடிந்து சொருகிக்கொண்டு, இனிமேல் தான் என்ன செய்வதென்று யோசித்தான். வண்டியில் அவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் அவன் மனத்தைப் பிளக்குகின்றன. அவர்கள் தன் மீதும் சுலோசனுவின் மீதும் கொண்டுள்ள பொருமையைக் கண்டு மனம் பயந்து நடுங்கியது. சுலோசனு விஷயமாக அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து விவரத்தை நன்ருக அறியக்கூடவில்லை யாகையினுல் அது விஷயத்தில் அவனுக்கு அபாரமான பயமும் திகிலும் உண்டாகிவிட்டன. இங்கு கிடத்தி இருப்பது ஒரு பெண்பிள்ளையைப்போலவே இருக்கின்றது. இவள் சுலோசனுதானு, அல்லவா என்பதுவும் நமக்கு விளங்கவில்லை. அந்தப் பாவிகள், 'அந்த சுலோசனுவின் கொழுப்பு'

---

குடும்பச் செலவு அதிகரிப்பதால் வீட்டுத் தலைவருக்கு கோபம். தானே அழைத்து வரும் விருந்தாளிகளுக்கோ எல்லை இல்லை. விருந்தாளியும் குறையாமல் செலவும் அதிகப்படாமல் இருப்பதற்கு எந்த குடும்பத்தில் தான் இயலும்.

என்று பேசுவதால் சந்தேகத்திற்கு இடமுண்டாகிறது. இந்த சுலோசன என்று கூறுது அவ்விதம் மறைபொருளாகப் பேசுகின்றுர்களோ! ஒன்றும் தெரியவில்லை. அந்த மாது யார் என்பதைத்தான் நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதைத் தெரிந்த பிறகு மேல் நடக்கவேண்டியதைக் கவனித்து நமது கண்மணியைக் கண்டுபிடித்து, முன் கூட்டி எச்சரித்துவிட்டுத் தகுந்த ஜாக்ரதை செய்யலாம்'' என்று பலவிதமாக எண்ணியவாறு அந்த சத்திரத்திற்குப் பக்கத்தில் வந்து முக்காடுடன் நின்றுன். அச்சத்திரத்தில் இன்னும் சில ஜனங்களும் தங்கி இருந்தார்களாகையினுல் ஜன நடமாட்டம் அதிகரித்திருந்தது. அப்போது இரவு சுமார் 10 மணி இருக்கலாம். எங்கும் ஒரே இருள் சூழ்ந்துகொண்டிருக்கிறது. காற்று விற் விற் என்று அடிக்கின்றது. பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறது. அது ஒரு சுத்த நாட்டுப்புற மாகையினுல் வீதியில் எங்கும் அதிகமான ஜன நடமாட்டமே இல்லை. வானத்திலுள்ள நக்ஷத்திரங்களையும் மேகங்கள் தம் வயமாக்கிக்கொண்டு மறைத்துவிட்டன. சிறிய மழையும் ஆரம்பித்தது; அமாவாசைக் காலமாதலால் இருள் இயற்கையாகவே கப்பிக்கொண்டது. ஆங்காங்கே நாய்கள் குரைக்கும் சத்தத்தையின்றி வேறு சத்தம் கேட்கவில்லை.

நமது விமலநாதனுக்கு ஏற்கெனவே மனத்தில் போராடும் பயத்துடன் இந்த கொடிய இருளும், நாய்கள் குரைக்கும் கோரமான சத்தமும் ஒன்று கூடி அவனை வதைக்கின்றன. அதோடு வீடுகளின் வாயலில் சிலர் "இன்று தான் கடுமையான காற்று மழை படிக்கப் போவதாகப் பேப்பரில் விளம்பரம் வந்திருக்கிறது'' என்று பேசிக்கொள்ளும் வார்த்தைகள் விமலநாதனின் செவியில் பட்டதுமே, அவன் இவ்விஷயங்களை ஏற்கெனவே பேப்பரில் படித்த நினைவு சடக் கென்று வந்தது. "ஆகா! இன்று இப்போது அடிக்கும்

---

"என்னுடைய வாஞ்சை முன்னிலும் ஆயிரம் பங்கு அதிகமாகவே இருக்கிறது எள்ளளவும் குறையவில்லை.'' என்று ஒருகாலத்தில் அன்பாக இருந்தவர்கள் கூறுவதைக் கேட்பதே ஓர் மகிழ்ச்சியாக இருக்கிறது. நீறு பூத்த நெருப்புப் போன்று அன்பு அப்படியே மாறுது மனத்தில் என்று மிருந்தால் போதும் என்பது தான் எனது வேண்டுகோள்'' என்கிறுர் ஒருவர்.

காற்றும் மழையும் கண்டால் இக்காற்றே புசல் காற்றாக மாறிவிடும் போலிருக்கிறதே! நாம் இந்த வீதியில் தனிமையில் அகப்பட்டுக் கொண்டோமே!" என்று எண்ணியபடி சத்திரத்தின் திண்ணை மீது ஏறி ஒரு மூலையாக அமர்ந்தான். தான் எவ்விதம் உள்ளேபுகுவது என்று மிக்க யோசனையுடன் சமயம் பார்த்துக்கொண்டே இருக்கிறான். மழையும் காற்றும் பொழுது ஏற ஏற பலத்துக்கொண்டே வருகிறது. காற்றும் மழையும் சேர்ந்து கலந்தடிப்பதால் செவிக்கு நிரம்பவும் பயங்கரமான ஓசையுண்டாக்கி எல்லோரையும் நடுங்கச் செய்கிறது. விமலநாதன் வீதிப் பக்கமாக நோக்குகையில் மரங்களெல்லாம் தட்டா மாலை சுற்றுவது போல ஆடுகின்றன. அந்த காட்சி நிரம்பவும் பயத்தை யுண்டுபண்ணுகிறது. விமலநாதன் மனமும் அப்போ தடிக்கும் காற்றும் ஒன்றாகவே இருக்கின்றன. மனத்தில் பலவிதமான எண்ணங்களாகிய புசல் காற்று சுழற்றுகின்றது. ஒவ்வொரு வீட்டின் ஜன்னல்களும் பட்டார் பட்டார் என்று அறைகின்றன. இன்று நமக்கு ஏதோ ஒரு பெருத்த ஆபத்துத்தான் இருக்கிறது என்று எண்ணி உட்கார்ந்திருக்கையில் சத்திரத்துக் கதவு திறக்கப்பட்டது. ஒரு கிழவி வீதியில் வந்து எச்சிலை எறிந்தாள். அதே தருணத்தில் விமலநாதன் சந்தடி செய்யாது இறங்கி மெல்ல உள்ளே நுழைந்து நடைத் திண்ணையில் அனேகர் படுத்திருந்த இடத்தில் தானும் மத்தியில் புகுந்து படுத்துவிட்டான். காற்றின் கொடுமையினால் ஒரு விளக்கு கூட எரியாது அவிந்துவிட்டது. அவ்விடத்திலும் இருள் சூழ்ந்திருந்ததாகையினால்; அவன் மெல்லப் படுத்துவிட்டான்.

நேரம் செல்லச் செல்ல காற்றும் மழையும் அதிகமாகப் பலத்துவிட்டதால் தூங்கிக்கொண்டிருந்தவர்களும் எழுந்துவிட்டார்கள். அந்த சத்திரம் மிகவும் பழமையானதாகையினால்

---

பாட்டுக் கச்சேரிகளுக்கு சிலர் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வந்து விடுவதால் அக் குழந்தைகளின் அழுகையினால் அவர்களுக்கும் கஷ்டம்; மற்றையோருக்கும் கஷ்டம். குழந்தையை அழவிடவேண்டாமென்று யாரேனும் கூறினாலோ அவர்களிடம் பெருத்த சண்டைக்கு ஆரம்பித்துவிடுகிறார்கள்; அந்த புத்தக் கச்சேரியே பெருத்த கச்சேரியாகிவிடுகின்றது.

எங்கே இடிந்துவிடுகின்றதோ என்கிற பயத்தினால் ஒருவரோடொருவர் அது விஷயமாகவே பேசிக்கொண்டு குளிர் தாங்காது கூடத்திலுள்ள அறைகளில் சென்று யாவரும் ஒதுங்கிக்கொண்டார்கள். விமலநாதன் மட்டும் அவ்விடத்திலேயே படுத்திருந்தான். மரங்கள் தபீர் தபீர் என்று விழுகின்ற சத்தம் செவியை செவிடுபடச் செய்கின்றது. இந்நிலையில் விமலநாதன் மெல்ல எழுந்து அந்த சத்திரத்திலுள்ள அறைகளில் எங்கு விளக்கு தெரிகின்றதோ அங்கு கதவின் இடுக்கினால் பார்த்துக்கொண்டே செல்கையில் விமலநாதனின் பின்புறத்திலிருந்து அவன் தலைமீது 'பட்டார்' என்ற ஒரு அடி விழுந்தது, அவ்வளவுதான் விமலநாதன் "ஹா" என்ற ஓர் பெருஞ் சத்த மிட்டவாறு வெட்டிச் சாய்த்த மரம் போலக் கீழே விழுந்தான்.

---

## 12-வது அதிகாரம்

## மாலின் கருணை காலத்திலுதவும்.

பரிமளா தன் நாயகனிடம் பேசிவிட்டுச் சென்ற பிறகு அவளுக்கு ஏதோ வேலை இருந்தமையினால் அதைக் கவனித்துவிட்டுப் பிறகு வழக்கம் போல தன் நாயகனின் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். மழை ஆரம்பித்துவிட்டது. மணி எட்டடித்தது. சாதாரணமாக விமலநாதன் எட்டு மணிக்குக்கூட சில தினங்களில் வருவது வழக்கமாகையினால் அன்று அவ்வாறு லேட்டாக வரலாமென்று நினைத்து எதிர் பார்த்திருந்தாள். மணி 8 அடித்த பிறகும் வெகு

---

பின்னும் சிலர் சண்டித்தனமாக நெருக்கடியான ஜனத்திரளின் மத்தியில் வெட்கமில்லாது விழுந்தடித்துக்கொண்டு வருவதோடு, அங்கு உட்கார்ந்திருப்பவர்களின் மடியின்மீது கூசாது ஏறி உட்கார்ந்துவிடும் வேடிக்கையை என்னென்பது? அத்தகையோரிடம் வாயைத் திறந்தால் சண்டைக்கோளவில்லை. கால்வலி தாங்காது இழுத்துக்கொள்ளப்படும் பாடோ 'அப்பப்ப' கூறமுடியாது.

கோமாகிவிட்டதால் பரிமளாவின் பயம் அதிகரித்தது. அவள் வீதிப்பக்கமே நின்று வழி பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றும் மழையும் தடபுடலாக ஆரம்பித்துவிட்டது. காற்று பொழுது ஏற ஏற விற் விற் என்று வெகு விசையாக அடிக்கின்றது. ஷெட்டில் சென்று பார்க்கையில் முதலில் மோட்டார் காணப்படவில்லை. பின்னர் பார்க்கையில் மோட்டார் இருப்பதைக் கண்டாள். இதென்ன! கார் மட்டும் இங்கு எவ்விதம் வந்தது? இன்று வண்டியைத் தானே ஓட்டிக்கொண்டு சென்றாரே யன்றி ட்ரைவரும் போகவில்லை, அவனுக்கு விஷயமே தெரியாது. ஒருகால் தோட்டத்திற்குச் சென்றிருப்பாரோ!" என்று சற்று நிதானித்தாள். பிறகு வேலைக்காரனைக் கொண்டு தோட்டம் முற்றிலும் பார்த்தாள். எங்கும் காணவில்லை யாகையினால் அவளுடைய பயம் அதிகரித்து விட்டது.

விமலநாதனின் தாய் தந்தையரும் 'இன்னும் மகன் வரவில்லையே" என்று கவலையுறத் தொடங்கினர்கள். ஒருகால் சுலோசனா வீட்டிலிருப்பாரோ அங்கு சென்று பார்க்கலா மென்று பரிமளாவுக்குத் தோன்றியதால் உடனே ட்ரைவரை அழைத்து மோட்டார் தயார் செய்யும்படியாகச் சொல்லி அதில் தான் அமர்ந்து அந்த மழையில் சுலோசனாவின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு கோபிநாதனுக்கு ஜுரமாகையினால் அவன் நினைவு தெரியாமல் படுத்திருந்தான். அங்கு சுலோசனாவைக் காணவில்லை. வேலைக்காரியை விசாரித்ததில் "அந்த அம்மாள் இன்று சாயங்காலம் கடற்கரைக்குச் சென்றவர்கள் இன்னும் வரவில்லை. அப்போதிலிருந்து நான் வழி பார்த்துக்கொண்டிருக்கிறேன்; அந்த அம்மாள் வெளியில் சென்ற பிறகு கோபிக்கு திடீரென்று பிரமாதமாக ஜுரம் வந்துவிட்டது. மருந்து கொடுப்போருமில்லை, காற்றும் மழையும் இவ்விதம்

---

சாதாரண மனிதர்களின்மீது அபரிமிதமான வாஞ்சையை வைத்து ஏமாற்றமடைந்து பின்னர் மனமுருக நேருகின்றது. அவ்வன்பை எல்லாம் வல்ல கடவுளினிடத்தில் ஒருமனப்பட்ட பக்தியுடன் செலுத்தி இருந்தால் எவ்வளவு உபயோகமாக இருக்கும்; மோக்ஷ சாம்ராஜ்யம் தானாகக் கிடைக்கும்? இந்த பக்குவ புத்தி எல்லோருக்குமிருந்தால்?

41

கலந்து அடிக்கின்றது, எனக்குப் பயமாக விருக்கின்றது; என்றும் அந்தம்மாள் இவ்விதம் வராமலிருந்ததே இல்லை. இன்று என்ன காரணமோ! எங்கிருப்பார்களோ! ஒன்றும் தெரியாமல் நான் தவிக்கிறேன். அந்தம்மாள் சென்றது கோபிக்குக் கூடத் தெரியாதாம். "அக்கா, வந்தாளா; வந்தாளா!" என்று கேட்டுக்கொண்டே இருக்கிருன். நான் "உங்கள் வீட்டிற்கு வந்தார்களோ' என்று நினைத்து அங்கு விசாரிக்க எண்ணினேன். நீங்களே தேடுவதைப் பார்த்தால் அவர்கள் அங்கு மில்லை என்று தோன்றுகின்றதே! என்ன செய்வேன்? அவர்கள் எங்கு; சென்றிருப்பார்கள். மனம் ஏதேதோ எண்ணித் தவிக்கின்றதே! அந்தம்மாள் செல்லும் இடமோ எனக்குத் தெரியாது" என்று புலம்ப வாரம்பித்துவிட்டாள்.

இதைக் கேட்ட பரிமளாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கல்லாய்ச் சமைந்துவிட்டாள். அவளுடைய திகில் அதிகரித்தது. தன் நாயகனையும் காணவில்லை; இங்கு இந்தம்மாளையும் காணவில்லை. இருவரும் எங்கேனும் சென்றிருப்பார்களோ என்பதற்கு அவ்வாறு இதுபரியந்தம் சென்றதில்லை. மேலும், ஒருகால் கடற்கரைக்குச் சென்ருலும் இவ்விதம் வராமலிருக்கமாட்டார்களே! ஐயோ! இவ்விருவருக்கும் உள்ள விரோதிகள் எண்ணிக்கையில் இல்லையே! அத்தகைய காதகர்கள் இவர்களை வேண்டுமென்றே குத்திக்கொன்றிருப்பார்களோ! கடலில் தூக்கி எறிந்திருப்பார்களோ! என்ன செய்வது? நாம் எங்கு சென்று இனி விசாரிப்பது? இந்த மழையுடன் அகாதமான சண்டமாருதமும் வீசுகின்றதே!" என்று நினைத்தவளாய் கோபியின் அருகில் சென்று "அப்பா! கோபி! உனக்கு எப்போது ஜுரம் வந்தது? உன் தமக்கை எங்கு சென்ருர்கள் என்பது உனக்குத் தெரியுமா!" என்ருள்.

கோபிக்கு அதிகமான ஜுரமடிக்கின்றது. பேசவும் கூடவில்லை. அவன் மெல்லத் திணறியவாறு பேசத்தொடங்கி "மாமி!

---

காரணத்துடன் மனஸ்தாபப்பட்டுப் பிரிவது உலகத்தில் உண்டு. காரணமேயின்றி,—மனஸ்தாபமேயின்றி—சினேகம் பிரிந்துவிடும் வேடிக்கையை என்னென்பது? காலக்கூற்றின் பலன்போலும்,

எனக்கு இன்று மத்தியானமே ஜுரம் வந்துவிட்டது. நான் வீட்டிற்கு மாலையில் வந்துவிட்டேன்; அப்போது முதல் அக்காவைக் காணவில்லை. அவள் எங்கு சென்றாள் என்பது எனக்குத் தெரியாது. இன்னும் அக்கா வரவில்லையா!" என்றான்.

பரிமளா—கோபி! அக்காவையும் இன்னும் காணவில்லை. மாமாவையும் இன்னும் காணவில்லை. நீ இங்கு தனிமையில் படுத்திருக்க வேண்டாம். எழுந்து என்னோடு வீட்டிற்கு வா; நாளைக்காலையில் வரலாம். காற்றும் மழையும் அதிகமாக வீசுகின்றது. வீதியில் தலைகாட்ட முடியவில்லை—என்று கூறி கோபியை மெல்ல வேலைக்காரனின் சகாயத்தினால் பிடித்து அழைத்து வண்டியில் ஏற்றி வீட்டிற்கு அழைத்துக்கொண்டு சென்றாள். தன் மாமி மாமனுடன் என்ன தெரிவிப்பது என்று அவளுக்குத் தோன்றாமையினால் குழம்பிப்போய் கோபியைத் தன்னுடைய அறையில் ஒரு சோபாவில் படுக்கச் செய்தாள். இதற்குள் விமலநாதனின் தாயார் பரிமளாவை நோக்கி "ஏன் பரிமளா! இன்னும் விமலநாதன் வரவில்லையா; இந்த மழையும் அமர்க்களமும் தடபுடலாக இருக்கிறதே!" என்றார்கள். 'சுலோசனாவையும் காணவில்லை' என்பதை அவர்களிடம் சொல்வதற்கு அஞ்சி பரிமளா அதை மறைத்துவிட்டாள். பிறகு தன் கணவன் செல்லக்கூடிய இரண்டோர் இடத்திற்கு டெலிபோன் மூலம் விசாரித்ததில் அங்கு இல்லை என்கிற தகவலே கிடைத்தது. சுலோசனாவின் பெரிய டாக்டரின் வீட்டிற்கு ஒருகால் சுலோசனா சென்றிருப்பாளோ என்று அங்கு டெலிபோன் செய்ததில் அங்கும் இல்லை என்ற மறுமொழியே கிடைத்தது. "ஐயோ! இதென்ன போதாக்காலமோ! தெரியவில்லையே! இருவருக்கும் ஏதோ ஆபத்துத்தான் நேர்ந்துவிட்டது." என்று அபாரமான திகில் பிடித்துக்கொண்டது. இனி தான் என்ன செய்வது. எங்கு சென்று விசா

---

அதிகமான வாஸனையுள்ள பொருளையும், அதிகமான துர் மணமுள்ள பொருளையும் மறைப்பதற்கு என்ன பாடு பட்டாலும் முடியாது. அதேபோல ஒருவருக்கு அபாரமான பெயரும், புகழும் வந்துவிட்டால் அல்லது அழியாத அபகீர்த்தியும் கெட்ட பெயரும் வந்துவிட்டால் இரண்டையும் மாற்றவே முடியாது. நடுத்தரமாயுள்ளதைத்தான் ஒளிக்கவும், மாற்றவும்முடியும்.

ரிப்பது. காற்றும் மழையும் இவ்விதம் உபத்திரவிக்கின்றதே!" என்று நடுங்கியவாறு தவிக்கின்ருள். பொழுது ஏற ஏற காற்றும் மழையும் பலத்துவிட்டது.

* * * * * *

இது இங்ஙனமிருக்க, நமது நாரீமணியாகிய சுலோசன அன்று வழக்கம்போன்று கடற்கரைக்கு உலாவச் சென்ருள். அப்போது அங்கு மணற் பாங்கில் திடீரென்று ஒரு கூச்சல் உண்டாயது. சுலோசன வண்டியை நிறுத்திவிட்டு சற்று கவனித்துப் பார்த்தாள். பிறகு "அங்கு சென்று பார்ப்போம்" என்று தீர்மானித்து மெல்ல இறங்கி அங்கு சென்று பார்க்கையில் சினிமாக்காரர்கள் அங்கு ஒருவருக்கொருவர் சூஸ்திரத்தினல் துப்பாக்கியால் சுடுவதும், கடலில் தூக்கி எறிவதுமான காட்சிகளை நடித்துப் படம் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் அவளுக்கு ச்யாம்சுந்தரைப் பற்றிய பழங்கால விஷயங்களெல்லாம் நினைவில் தோன்றின. அவ்வாறு தோன்றியதும் அவள் பயந்துபோய் அங்கிருந்து வேறு பக்கமாக நடக்கவாரம்பித்து மணலில் இரண்டடி வைத்ததும் அங்கு அவளுடைய பெரிய டாக்டரின் பெண் வருவதைக் கண்டு வந்தனம் செய்து, இருவரும் பேசிக்கொண்டே சிறிது தூரம் சென்ருர்கள். சுலோசன டாக்டரின் மகளிடம் ஏதேதோ பேசிக்கொண்டே இருக்கையில் அங்கு டாக்டரின் மகனை ராமச்சந்திரனை சற்று தூரத்தில் பார்த்தாள். அன்று சுலோசன ஓர் முக்கியமான கேஸ் விஷயமாகத் தன் வைத்தியமாதினிடம் சென்ருள்; அங்கு சென்ற தருணம் அந்தம்மாள் நித்திரை செய்துகொண்டிருந்தார்களாகையினல் அவள் சற்று உட்கார நேர்ந்தது. ராமச்சந்திரன் அங்கு சுலோசன இருப்பதைக் கண்டு வழக்கம்போலப் பேசவந்தான். அது அவளுக்குப் பிடித்த

---

சில வீடுகளில் அன்னியர் செல்கையில் அவ் வீட்டிலிருக்கும் மனிதர்களின் சண்டை, சச்சரவு முதலியவற்றைக் கண்டு அந்த வீட்டில் அரைவிடிை இருப்பதற்கும் பிடிப்பதில்லை; நீராத வேலையாகப் போய் அகப்பட்டுக்கொண்டாலோ மனம் ஒரு நிமிடமும் நிம்மதியின்றி தத்தளித்து வருந்துகின்றது.

மில்லையாகையினால் அவள் சடக்கென்று எழுந்து வீட்டிற்கு வந்து விட்டாள். அதைக் கண்ட ராமச்சந்திரன் "ஆகா! இரு; இரு! நான் பிறகு ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்" என்று உறுமினான். அச் சொற்கள் அவள் செவியில் விழுந்ததாகையினால் அதே நினைவுடன் மனம் தவித்தவாறு வீட்டிலிருந்தாள். அவளுக்கு துக்க மதிகரித்து விட்டதால் "சற்று பொழுது போக்கக் கடற்கரைக்குச் சென்று வருவோம்" என்று வந்தாள். வந்தவிடத்தில் டாக்டரின் பெண்ணைக் கண்டு பேசுகையில் ராமசந்திரனின் உருவத்தைக் கண்டதும் அந்தப் பழய நினைவு வந்துவிட்டதால் தேகமே நடுக்கலுற்று ஆடி யது. அவன் தங்கைக்கு அவனுடைய துஷ்டச் செய்கை தெரியுமோ, தெரியாதோ என்ற சந்தேகமும் கூடிற்று. அந்த ராமச் சந்திரன் இவளை தூரத்திலிருந்து பார்த்த பார்வை வெகு குரூர மாக இருந்தது. அவள் அந்தக் கொடிய பார்வையினால் மனந் தாங்க முடியாததால் ஏற்கெனவே அடிக்கடி வரும் மயக்கம் அப்போது அவளுக்கு வந்துவிட்டது; நடந்துகொண்டே இருந்தவள் திடீ ரென்று கிழே விழுந்தாள்.

இதைக் கண்ட டாக்டரின் மகள், "ஹா! சுலோசனா! இதென்ன இவ்விதம் திடீரென்று விழுந்துவிட்டீர்களே! என்று கூறி உற்றுக் கவனித்ததில் மயக்கத்தினால் விழுந்துவிட்டாள் என்று நன்கு தெரிந்துகொண்டாள். அங்கு போய்க்கொண்டிருந்தவர்கள் அப் படியே நின்று கும்பலாகக் கூடிவிட்டார்கள். டாக்டரின் மகள் நீரைக் கொணர்ந்து முகத்தில் தெளிக்க அருகிலிருந்த குழா யண்டை ஓடினாள். அதற்குள் ஜனங்கள் "ஐயோ! அனாதையாக விழுந்து கிடக்கின்றார்களே! இவர்களுடைய சொந்த மனிதர்கள் யாரும் வரவில்லையா!" என்று கூறத் தொடங்கினார்கள். தூரத்தில் வந்துகொண்டிருந்த ராமச்சந்திரனும் அவனு டைய சினேகிதனும் அங்கு ஓடோடி வந்து "ஹா! என்ன

---

தானத்தில் பிரதானம் எது என்றால் நிதானந்தான். எந்த வீட்டில் அந்த நிதானம் தப்பி உதாசினமான வார்த்தைகளும், மரியாதை யற்ற செய்கைகளும் ஓங்குகின்றனவோ அந்த குடும்பம் எந்த விஷயத்திலும் உருப் படுவதே இல்லை.

ருமை சுலோசனு! நான் அப்போதே வெளியில் போகவேண்டாம் "என்று கூறினேனே; கேட்காது வந்து விழுந்துவிட்டாயே!" என்று கூறிக்கொண்டே சுலோசனுவைத் தூக்கி தன் சினேகிதனின் உதவி யால் தனது மோட்டாரில் கொண்டு கிடத்தினுன். அதற்குள் டாக்ட ரின் மகளும் ஜலத்துடன் ஓடிவந்து "அண்ணு! நீ இந்த சமயத்தில் எங்கிருந்து வந்தாய்?" என்று கூறிக்கொண்டு வண்டியிலேறினுள். ஜலத்தை சுலோசனுவின் முகத்தில் தெளித்தாள். உடனே வண்டி வெகு விரைவில் கிளம்பிவிட்டது. ராமச்சந்திரன் தன் மோட்டா ரைத் தானே ஓட்டிக்கொண்டு போவதாயும், சுலோசனுவின் வண் டியை நமது ஷெட்டிற்கே கொண்டுவா, என்று டிரைவரிடம் கூறி விட்டு அந்த வண்டியை நேரே தன் வீட்டிற்கே கொண்டுசென்று அவளை ஓர் தனித்த சோபாவில் கிடத்தினுன். மனத்தில் விசன மும், திடுக்கிடும் விஷயங்களும் உண்டாகும்போது அவை தாங்காது மயக்கம் வருவது சுலோசனுவுக்கு வழக்கமாகிவிட்டதால்—அவள் தேகம் அத்தகைய நொய்ப மாகையினுல்—அன்றும் மூர்ச்சையாகி விட்டாள். அங்கு பெரிய டாக்டர் அவளுக்கு சிகிச்சைகள் செய்த தில் இரவு 10 மணி சுமாருக்கு சுலோசனுவுக்கு மயக்கம் தெளிந் தது. மிக்க தேக அதிர்ச்சியுண்டாகி இருந்ததால் ஆயாஸம் அதிக ரித்திருந்தது; எனினும் நல்ல ப்ரக்ஞை வந்துவிட்டது. தான் கடற் கரையில் மயக்கமாக விழுந்துவிட்டது அவளுக்கு நினைவில் வந்தது. உடனே "நாம் எங்கிருக்கிறோம் என்கிற எண்ணமுண்டாகிய தாகையினுல் சடக்கென்றெழுந்தாள். "கோபி! கோபி!" என்று இருமுறை அழைத்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். இது தன் வீடல்ல, வைத்திய நாதின் வீடு என்று தெரிந்துகொண்டாள். தன் பக்கலில் வைத்தியநாதின் மகள் வீற்றிருப்பதைக் கண்டாள். அவளுடைய திகில் அதிகரித்துவிட்டது. "அம்மா! அம்மா!" என்று அழைத்தாள்.

---

நமது கைக் காசை செலவிட்டுக்கொண்டு கண் காட்சி காணச் சென்றால் அங்கு கண் காட்சியுடன், சுருட்டுப் புகையின் துர்மணத்தினுல் மூக்குக் காட்சி, தலைவலிக் காட்சி எல்லாம் விலையில்லாமல் பெற்றுக்கொண்டு வர நேருகின்றது.

இது கேட்ட ராமச்சந்திரன், "என்ன சுலோசனு! என் அம்மாளைக் கூப்பிடுகிருய்! அம்மாள் இத்தனை நேரம் இங்குதானிருந்தாள். ஒரு ஆபத்தான ப்ரஸவ கேஸுக்காக யாரோ வந்து அம்மாவை அழைத்துச் சென்றூர்கள். நரசு வேறே ஒரு இடத்தில் இரவு வேலைக் கமர்ந்திருப்பதால் அம்மா தனக்கு ஒத்தாசைக்காக அம்மணியை அழைத்துச் சென்றிருக்கிருள். உன்னை வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படியாக என்னிடம் தெரிவித்துச் சென்றுள். நீ ஏன் பயப்படுவதாக உன் முகம் காட்டுகிறது! என்னிடத்தில் வித்யாசமாக நினைக்காதே! நான் உன்னிடம் சொல்லாத புதிய வார்த்தைகள் இனி வேறு இல்லை. என்னைக் காப்பாற்றுவது உன் கையிலிருக்கிறது. என்ன பேசாதிருக்கிருய்!" என்று வெகு மகிழ்ச்சியுடன் கேட்டான்.

இந்த கொடுமையான வார்த்தையைக் கேட்டதும் — தான் பெரும் ஆபத்தில் சிக்கி இருப்பதை அறிந்ததும்—அவள் உள்ளம் துடித்தது. இருதயம் படபடத்துவிட்டது. "ஐயோ! நாம் என்ன பாவத்தைச் செய்தோமோ! இத்தகைய பேராபத்தில் மீண்டும் சிக்கிக்கொண்டோம், என்ன செய்வேன்? பாழும் பிறவி நான் எதற்காக எடுத்தேன்?" என்று தன்னைத்தானே நொந்து கண்ணில் நீர் தாரைதாரையாக விட்டவண்ணம் "அண்ணு! உங்களுக்கு அதிக புண்ணியமுண்டு; நான் என் வீட்டிற்குச் செல்கிறேன். என்னை இங்கு யார் கொண்டுவந்தார்கள்?" என்று தைரியமாகக் கேட்டாள்.

ராம:—ஏன் அவ்வாறு கேட்கிருய்! நீ மயக்கமாக விழுந்ததை நான் பார்த்துக்கொண்டிருந்தும் பேசாமல் செல்வதற்கு என் மனமியலுமா! நானும் என் தங்கையுமே உன்னை இங்கு கொணர்ந்தோம்.

---

முற்காலங்களில், யாகம், யக்ஞம் செய்த புகை அண்டத்தை அளாவியதாகக் கூறுவார்கள், இக்காலத்திலோ ஒவ்வொருவரின் வாயினின்று வரும் சுருட்டு வகைகளின் புகை கண்டத்திற்குள் புகுந்து, தொண்டையைக் கெடுத்து மேலே அண்டத்தையும் அளாவுகின்றது. அது கலியின் யாகத்துப் புகை போலும்.

சலோ:—மெத்த சந்தோஷம். நீங்கள் செய்த உதவிக்காக நான் மெத்த வந்தனம் செய்கிறேன். என் மோட்டார் எங்கே! நான் வீட்டிற்குச் செல்கிறேன். வீட்டில் எல்லோரும் தேடியலேவார்கள். பயந்து நடுங்குவார்கள். ஆகையினால் நான் செல்கிறேன்—என்று மேல் பகட்டாகப் பேசுகின்றாளே யன்றி உள்ளுக்குள் அந்த விடத்தில், தான் நிரம்பவும் ஆபத்தான நிலைமையில் "அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்து நடுக்கமுற்று துடிக்கின்றாள். தான் இந்த நிமிடத்தில் இவ்விடத்தைவிட்டுக் கிளம்பாவிடின் பெருத்த ஆபத்து நேர்ந்துவிடும்" என்று நன்கறிந்துகொண்டாள்.

ராம:—சலோசனு! உனது முகத்தைப் பார்த்தால் நீ அபாரமான பயத்தை அடைந்திருப்பதாக நன்கு விளங்குகின்றது. நீ பயப்படாதே! அந்த விமலநாதன் செய்யும் அனியாயமும் அக்ரமும் உனக்குத் தெரியாவிடின் நான் கூறுகிறேன் கேள். அவனையே நீ எண்ணிப் பிரமித்து மலேக்கின்றாய் என்பதை நான் அறிவேன். நீ வீணுக அவனை எண்ணி ஏமாற்ற மடையாதே! உன்னையே எண்ணி உயிர் துடிக்கும் என்னை நீ தாராளமாகக் கல்யாணம் செய்துகொண்டால் நாம் வெகு சந்தோஷமாக இருக்கலாம்—என்று அவன் பேசிக்கொண்டே இருக்கையில் சுலோசனு இடைமறுத்து "அண்ணு! இந்த அசாவசியமான வார்த்தைகள் எனக்கு வேண்டாம். நான் இப்போது வீட்டிற்குப் போகவேண்டும்; வேலைக்காரனைக் கூப்பிடும்." என்றாள். அவ்வார்த்தையை அந்தப் பாவி செவியில் வாங்கவே இல்லை. குற்றலாக நகைக்கின்றான். இந்த கள்ள நகைப்பையும் கொடிய பார்வையையும் கண்ட சுலோசனுவின்

---

ஒரு மனிதருடைய யோக்யதையையும் அவர்களின் குணுகுணங்களையும் தெரிந்துகொள்ளாமலேயே சிலர் அவர்கள்மீது தப்பபிப்ராயங்கொண்டு அவர்களை தூஷிக்கின்றார்கள். எந்த மனிதரை தூஷித்தார்களோ, அதே மனிதரும், தூஷித்தவரும் ஒரு மகா பண்டிதரின்—அறிவாளியின்—முன் சந்திக்க நேர்ந்த காலத்தில் சம்பாஷணையின் மூலமாயும், பண்டிதரின் வார்த்தையினுலும் தான் முன்னர் தூஷித்த மனிதரின் யோக்யதையை முற்றுமறிந்துகொண்டு பூஷிக்கத் தொடங்கிவிடுகிறார். தான் தூஷித்தது தவறுதல் என்பதையும் நினைத்து வருந்துகிறார். பிறகு வெகு சமாசந்தான். இது ஒரு வேடிக்கை.

மனம் படும்பாட்டைக் கூறவேண்டுமோ? அவள் இருக்கும் அறையின் ஜன்னல்களின் வழியாக காற்று வீசுகிற சப்தம் வெகு பயங்கரமாக இருக்கிறது. "இன்று பெருத்த காற்றுமழை படிப்பதும் என் துரதிருஷ்டந்தான்" என்று எண்ணிக் கலங்குகின்றான்.

ராம:—சுலோசனா! இப்போது அடிக்கும் காற்றுமழையின் வேகத்தைப் பார்த்தாயா! இதில் நீ உனது வீடுசெல்ல முடியவே முடியாது; இன்றிரவு எப்படியும் நீ இங்கிருந்துதான் தீரவேண்டும்! வீணே பறப்பதில் பயனில்லை. அதோ காற்றின் பயங்கரமான சத்தத்தைப் பார்த்தாயா! மழையும் அபாரமாகப் பெய்கின்றது, மனத்துயரம் கொள்ளாதே. எதற்கும் தைரியம் வேண்டும். நீ ஓர் டாக்டராகவிருந்து தைரியமில்லை என்றால் நகைப்பிற்கிடமல்லவா!—என்று தன் போக்காகவே பேசுகிறான். சுலோசனாவின் பயமோ அதிகரித்துவிட்டது. கடவுளை எல்லாம் வேண்டுகிறாள்; கண்ணீர் சோரவிடுகிறாள்; காற்று மழையின் பெரும் இரைச்சல் ஒருபுறம் நடுக்குகின்றது; அச்சமயத்தில் அவள் நிலைமை இருந்ததை விவரித்தல் கூடுமோ! அவள் ஒரு நிமிடத்தை ஒரு நரகவேதனையாக எண்ணித் துயருறுகின்றாள். அந்த சமயம் அகதிக்குத் தெய்வந்தான் துணை என்பதுபோல, அந்த பங்களாவின் கதவைப் பலமாக இடித்தவாறு "சார்! கதவைத் திறவுங்கள்" என்று யாரோ கூவினான்.

இதைக் கேட்ட ராமச்சந்திரன் மிக வெறுப்படைந்தவாறு எழுந்து சென்றான்; அதற்குள் வேலைக்காரன் கதவைத் திறந்தான். வந்த மனிதன் விரைக்க விரைக்க "டாக்டரின் மகன் நீங்கள்தானே! அந்தம்மாளும் அவர்கள் மகளும் கேஸ் விஷயமாக சென்று திரும்புகையில் எதிரில் வந்த ஓர் மோட்டார் காற்றின் விசையினால் இடக்கு முடக்காக இந்த மோட்டாரின்மீது மோதிய

---

"மக்களைப் பெற்றோர் வெட்கத்தை விடவேண்டும்" என்பது ஒரு பழமொழி. குழந்தைகளை கோயிலுக்கும் கல்யாண வீடுகளுக்கும் அழைத்துச் சென்றால்; அது வேணும் இது வேண்டுமென்று அழுது பிடிவாதம் செய்து பெரியவர்களின் கௌரவத்தைக் குலைத்துவிடுகின்றன.

தால் காற்றின் விசையில் இரு கார்களும் அப்படியே புரண்டு விழுந்துவிட்டன; இரு வண்டிகளின் ட்ரைவர்களுக்கும் பலத்த காயம் பட்டுவிட்டது; வண்டியின் உள்ளிருந்தவர்களுக்கும் நல்ல அடிதான் பட்டிருக்கிறதாகத் தெரிகிறது; உடனே இந்த விபத்தை யறிந்து எல்லோரையும் ஜனரல் ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். இங்கு தகவல் கொடுக்கும்படியாக எனக்கு உத்தரவு; அதைத் தெரிவித்தேன்" என்றான்.

இதைக்கேட்ட கெடுமதி கொண்ட ராமச்சந்திரனின் அப்போதிய நிலைமையில் வெறுப்பும், கட்டு மீறிய கோபமும் வந்துவிட்டது; எனினும் அடுத்த க்ஷணத்தில் பெற்ற தாய் என்கிற பாசத்தினால் "ஐயோ! தாயாருக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ?" என்று வருத்தமுண்டாகிவிட்டது. தன் தாயார் உயிருடன் நன்றாக இருந்தால் தனக்கு சலோசனாவை மணம் செய்து வைப்பாள் என்கிற ஓர் நம்பிக்கை அவன் மனத்தில் இருந்ததாகையினாலும், அன்னை என்கிற அன்பினால் பிணைக்கப் பட்டுவிட்டதாலும் மனம் ஒரு நிமிடத்தில் மாறிவிட்டது. உடனே அவன் அவர்களுக்குள்ள மற்றொரு மோட்டார்காரை தயார் செய்யும்படியாகக் கட்டளை யிட்டுவிட்டு சலோசனாவிடம் வந்து "சலோசனா! நீ விரும்பிய வண்ணமே உன்னை இன்று வீட்டிற்கு அனுப்பிவிடுகிறேன். அதோ உனது மோட்டாரையும் தயார் செய்திருக்கிறேன். உன்னை நான் பயந்துகொண்டு விட்டுவிடுவதாக நினைக்காதே; அன்றி உனக்கு இப்போதே நான் மிருகத்தனமாகத் தீங்கு செய்வேனென்றும் பயப்படாதே! நான் அத்தகைய கொடிய மூடனன்று. நான் துராக்ருதமாக உன்னை நடத்தவேண்டுமென்றால் நான் இப்போது உன்னை இவ்வறையிலேயே போட்டு பூட்டிவிட்டுச் செல்வேன். அதனால் யாதொரு காரியமும்;பலிதமாகா தென்பது

---

பெற்றவர்களைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த அன்புடன் நம்மிடம் நடப்பவர்களைக் கண்டு நமக்கு மனம் ஆநந்தமயமாகிறது. அன்புடன் அவர்கள் செய்து அளிக்கும் வெறும் ரஸம் அன்னமாயினும், புளித்தவையலாயினும் அவை தேவாம்ருதம்போன்று இருக்கின்றன. யாவற்றிற்கும் அன்புதான் காரணம்.

எனக்குத் தெரியும். உன் மனத்தை வருத்திக் கசக்க எனக்கு இஷ்டமில்லை. உனது மன உற்சாகமே எனக்கு முக்கியம். ஆகையினால் உன்னிஷ்டப்படியே உன்னை விடுகிறேன். இதனால் உன்னை விட்டு விட்டதாக எண்ணாதே!" என்று வெகு சாதுரியமாக தனக்கும் அவளுக்கும் அனுகூலமானவண்ணம் பேசிப் பின் அவளை நோக்கினான்.

சுலோசனாவுக்கு அப்போதுள்ள ஆனந்தத்திற்கோர் எல்லையே இல்லை. தன்பால் கடவுள் காட்டும் கருணையை எண்ணி உள்ளம் பூரித்தாள். ராமச்சந்திரனை நோக்கி "அண்ணா! உங்களுக்கு உங்கள் தாயார் ராமச்சந்திரன் என்று பெயர் வைத்தது வீணாகுமா! என்னப்பன் ராமன் ஒருவருக்கேனும் துன்பத்தைக் கொடுப்பாரா! தன் மனைவியாகிய மைதிலியின்பால் பரம அபராதம் செய்துவிட்ட அந்த காகாசுரனுக்கே மன்னிப்பளித்து காக்கவில்லையா! இதை எல்லாம் நோக்கின் பகவானின் துணை நம்மை யறியாமலேயே நிழல் போலிருக்குமென்று தெரியவில்லையா!" என்று மெல்ல பேசிக்கொண்டே வீதிக்கு வந்து சடக்கென்று; தன் மோட்டாரில் அமர்ந்து "உங்களுக்கு அனேக வந்தனம்." என்று கூறிக்கொண்டே காரை வெகு விரைவில் விட்டுவிட்டாள். அதற்குமேல் பேசுவதற்குக் கூடாது அவள் போய்விட்டதால் ராமச்சந்திரன் நேரே ஜனரல் ஆஸ்பத்ரியை நோக்கிச் சென்றான்.

வண்டியிலமர்ந்த சுலோசனா, "ஆகா! அன்று நேர்ந்த ஆபத்தில் சர்ப்பமாக வந்து நமது கற்பைக் காப்பாற்றினார். இன்று நேர்ந்த கண்டத்தில் பிறருக்கு விபத்தை உண்டாக்கி எனக்கு அபய மளித்துக் காப்பாற்றினார். அடாடா! என்ன அத்புதம்!" என்று தனக்குள் எண்ணியவாறு வெகு ஜாக்ரதையாக வண்டியை ஓட்டுகிறாள். காற்று வண்டியை ஆட்டுகின்றது. மனத்தில் பலவிதமான திகிலுடன் கடவுளை தோத்திரம் செய்தவாறு தன் வீட்டை யடைக்

---

அந்தரங்கமான அன்புடையவர்களுடன்—அறிவு நிறைந்தவர்களுடன்—பேசிக்கொண்டே இருந்தால் பொழுது போவதே தெரிவதில்லை. அன்பும் அறிவும் ஒன்றுகூடி அளப்பரிய ஆனந்த விருந்தை யளித்துவிடுகின்றன.

தாள். அப்போது இரவு சுமார் ஒரு மணி இருக்கும்; காற்றும் மழையும் சிறிதும் குறையாமல் விற் விற் என்று அதிகமாக அடிக்கின் கின்றன. அந்த பயங்கரமான இரவில் மெல்ல வீடுவந்து சேர்ந்ததும் கதவை இடித்தாள்; வேலைக்காரி இவளைக் கண்டதும் "அம்மா! இத்துணை நேரம் நான் பட்ட கஷ்டமும் கவலையும் கூற முடியாது. என்னென்னவோ எண்ணாததும் எண்ணி மனம் புண்ணாகிவிட்டேன். இத்தனை நேரம் என்ன?" என்று வெகு பக்ஷத்துடன் கேட்டாள்.

இதைக் கேட்ட சுலோசனு உண்மையான காரணத்தைக் கூறாது ஏதோ ஒரு பெரிய கேஸுக்குச் சென்றிருந்ததாகக் கூறிப் பின் "கோபி எங்கே!" என்று நிரம்பவும் வாஞ்சையோடு கேட்டாள். இதுகேட்ட வேலைக்காரி "அம்மணீ! கோபிநாதனுக்கு இன்று பிற்பகல் ஜுரம் வந்துவிட்டதாம். அதோடு நீங்கள் பீச்சிற்குச் சென்றபிறகு வந்தார். உடம்பு தெரியாமல் படுத்திருந்தார். மழையும் காற்றும் அடிக்கின்றது. நீங்களோ வரவில்லை. அவருக்கோ ஜுரம். நான் தவித்தேன். அப்போது பரிமளா அம்மாள் வந்தார்கள். நீங்கள் இன்னும் வரவில்லை என்றதும் மிக்க கவலை படைந்து கோபிநாதனை தன்னுடு அழைத்துச் சென்றூர்கள். எனக்கோ தூக்கமே கொள்ளவில்லை. மரங்கள் தபீர் தபீர் என்று வேரோடு விழுகின்றன. கதவுகள் தடார் புடார் என்று ஆடுகின்றன. காற்றின் வேகத்தினுல் உண்டாகும் கோஷம் பலவிதமான சப்தத்துடன் பயத்தை அதிகரிக்கச் செய்கின்றது. நான் ஒருத்தியே இங்கு விழித்துக் கொண்டு எண்ணாததும் எண்ணியவாறு கடவுளை வேண்டிக்கொண்டிருந்தேன். என்னுடைய மனிதர்களை எல்லாம் நினைத்தேன்.

---

சாதாரண வித்தையோ, பணமோ, அழகோ, அந்தஸ்தோ படைத்துவிட்டால் சிலர் தலை கால் தெரியாது துள்ளி விழுகின்றூர்கள். ஆனல் அறிவு, நல்ல பாண்டித்தியம், சங்கீத ஞானம், அழகு, ஐச்வர்யம் முதலிய சகல விதங்களும் சம்பூர்ணமாக நிறைந்து அரசிபதவிக்கு உரியவர்களாயுள்ள இராஜ ஸ்திரீகள் மேற்குறித்த அகம்பாவ மின்றி நிரம்பவும் வியக்கத்தக்க விதத்தில் வெகு வினயமாக இருக்கின்றூர்கள். அவர்களின் அத்புதமான குணத்தைக் காணக் காண மனம் ஆநந்தப் பாவசமடைகின்றது.

அவர்கள் என்ன பயப்படுகின்றார்களோ! வீடு எங்கே விழுந்து விடுமோ! இந்த சமயம் யாவரும் ஒன்றாக இல்லாது தனித்திருக்கிறோமே! கடவுளே! அவர்களுக்கு ஒரு குறைவு மின்றிக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டே உட்கார்ந்திருக்கையில் நீங்கள் கதவை இடித்தீர்கள். அதுவும் காற்றுதானோ என்று நினைத்தேன். உங்கள் குரலும் இந்த தடபுடலில் கேட்காமையால் சற்று நிதானித்துப் பிறகே திறந்தேன்" என்று தனது நிலைமையைக் கூறினாள்.

இவைகளைக் கேட்ட சுலோசனா கோபிக்கு ஜுரமென்றதால் மனது திடுக்கிட்டாள். "நாம் இல்லாமையினால் வருந்தினானோ! நாம் அவ்விடத்திற்குச் சென்று பார்ப்போம்." என்று கூறி வேலைக்காரனை பங்களாவைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, வேலைக்காரியை அழைத்துக்கொண்டு மோட்டாரில் செல்ல புறப்பட்டாள். காற்று முன்னிலும் அதிகரித்துவிட்டதால் வண்டி செல்வதற்கும் கூடாமல் தாறுமாறாக ஆடுகின்றது. இதைக் கண்ட வேலைக்காரி "அம்மணி! அவர்கள் கோபியை எத்தனையோ கனிகரத்துடன் பார்த்துக்கொள்வார்கள். ஆகையினால் நீங்கள் கவலைகொள்ள வேண்டாம். வண்டி இருக்கும் நிலைமையைக் கண்டால் கவிழ்ந்து விடும்போலிருக்கிறது. இதுவோ சிறிய வண்டி. இங்கேயே திருப்பிவிடுங்கள். ஆ! அதோ வழியில் பெரிய மரம் குறுக்காக வேரோடு விழுந்து வீதியை அடைத்துக்கொண்டிருக்கிறது; ஆகையினால் நாம் செல்வதற்கு வழியு மில்லை. திரும்புங்கள். உதயமாயதும் சென்று பார்க்கலாம்" என்று கெஞ்சி அன்புடன் கூறினாள்.

இதைக் கேட்ட சுலோசனா, முக்கியமாக ரோட்டில் மரங்கள் விழுந்து கிடப்பதால் வண்டி செல்லமாட்டாமல் தன் வீட்டிற்கே திரும்பி, தன்னறையில் சென்று படுத்துக்கொண்டாள்.

---

எந்த விகடங்களோ, நகைச் சுவை பொருந்திய செய்கைகளோ அததன் அருமை தெரிந்து அனுபவிப்பவர்களின் முன்பு செய்வதற்கு ஓர் தனித்த உற்சாகமாக இருக்கிறது; வம்பு பேசுபவர்களின் முன்பு சாதாரணமாகப் பேசுவதற்கே மனம் அஞ்சுகின்றது. எதற்கும் பாத்திரம் அறிய வேண்டும்.

ஒன்றுமே தோன்றவில்லை. "கோபி மருந்து சாப்பிட்டானே, இல்லையோ! ஒன்றும் தெரியவில்லையே! இன்று நமக்கு நேர விருந்த பேராபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிய அந்த கருணாமூர்த்தி என் கோபியைக் காப்பாற்றாது கைவிடுவாரா! விடமாட்டார்." என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு தூக்கமின்றி ஏதேதோ சிந்தித்தவாறே அந்த பயங்கரமான கொடிய இரவைக் கடத்தினாள்.

மணியும் ஐந்தடித்தது. அப்போதும் காற்றும் மழையும் ஓய்ந்த பாட்டைக் காணவில்லை. சுலோசனாவின் மனம் முற்றும் விமலநாதன் வீட்டிலேயே இருந்தது. கோபி எவ்வாறு இருக்கின்றானோ என்கிற கவலையே போராடுகின்றது. "வீதிகள் எப்போது சரிப்படும்; வண்டி எவ்வாறு செல்லும்" என்று எதிர் பார்த்துக் கொண்டே இருந்தாள். காலையில் வீதியில் மரங்களை அப்புறப் படுத்தி வழி செய்யத் தொடங்கினார்கள். சுலோசனா வழியை நோக்கினால் வேலை கெட்டுவிடும் என்று எண்ணி தன் ஆளிடம் பெட்டியைக் கொடுத்துவிட்டுத் தான் நடந்தே செல்வதென்று புறப்பட்டு கால் நடையாகவே வீதியிலுள்ள அலங்கோலங்களைக் கண்டவாறு செல்கிறாள். பங்களாவின் சமீபத்தில் செல்கையிலேயே பரிமளா எதிரில் வந்து "ஹா! சுலோசனா! வந்தாயா! உன் வீட்டிற்கே இப்போது நான் புறப்பட்டேன். கோபிக்கு ஜுரம் இன்னும் குறையவே இல்லை. நேற்று நீ எங்கு சென்றிருந்தாய். நேற்று நான் பட்ட பாடு சர்வேசன் தான் அறியவேண்டும். நீ எப்போது வந்தாய்? என் பிராணநாதரும் ஒரு கண்டத்திலிருந்து தற்போது தப்பி இருக்கிறார்; உன் முகத்தைப் பார்த்தால் எனக்குச் சாதாரணமாகத் தோன்றவில்லை. நீயும் ஏதோ பேராபத்தில் சிக்கியதாகவே தோன்றுகின்றது. என்ன விஷயம்! என்ன நடந்தது!" என்று வெகு வாஞ்சையோடும் சுதந்தரத்துடனும் கேட்டாள்.

---

ஒருவர் அதிகமாக உபயோகிக்கும் அநாவசியமான பதத்தை பிறர் எடுத்து வேடிக்கையார்த்தமாகச் சொன்னால் சிலர் அதைக் குற்றமாக எண்ணி கோபிக்கின்றார்கள். சிலர் சகஜமாக நினைத்துத் தாமும் கூட நகைக்கின்றார்கள்.

விமலநாதனும் ஒரு கண்டத்திலிருந்து தப்பினன் என்பதைக் கேட்டதும் சுலோசனை "ஹா!" என்று அலறி நடுங்கினாள். "என்ன! என்ன! மாமாவுக்கு ஆபத்தா! என்ன ஆபத்து நேர்ந்தது! இப்போது எங்கிருக்கிறார்? என்ன செய்தி நடந்தது?" என்று அடுக்கடுக்காக கேட்டுக்கொண்டே எல்லோரும் பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்கள். முதலில் கோபி இருக்கு மிடத்திற்குச் சென்றார்கள். "என் அன்பான கோபி! உடம்பு எவ்வித மிருக்கிறது?" என்று சுலோசனை கேட்டவாறு அவன் கையைப் பார்த்தாள். கோபிக்கு அப்போதும் ஜுரத்தின் வேகம் கடுமையாக விருந்தபோதிலும் அவன் சுலோசனையைக் கண்டதும் "அக்கா! வந்தாயா! இந்த காற்று மழையில் எங்கு என்ன ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டாயோ, என்று நான் இரவு முற்றும் நடுங்கினேன். அக்கா! நீ என்னைப் பார்ப்பது இருக்கட்டும். முதலில் நமது விமலநாத மாமாவைப் பார்த்து விட்டு வா!" என்றான்.

உடனே சுலோசனை அங்கு அடுத்தார்போலிருக்கும் விமலநாதனின் அறைக்குச் சென்று பெட்டியை ஓர் மேஜையின்மீது வைத்துவிட்டுக் கட்டிலின் அருகில் சென்று விமலநாதனைப் பார்த்தாள். அவளுடைய மனம் பட்ட பாட்டை அத்தகைய நிலைமையிலுள்ளோர் தான் விவரிக்கவேண்டும். இரு விழிகளும் மழை பொழிகின்றன. "மாமா! மாமா!!" என்று கூவினாள். அவன் கையைப் பிடித்து நாடி பார்த்தாள். அருகிலிருந்த பரிமளாவை நோக்கி "என்ன உடம்பு? என்ன விஷயம் ஒன்றும் தெரியவில்லையே' விவரம் கூறுங்கள்" என்றாள்.

பரிமளா:—இவரை நேற்று மாலையிலிருந்து காணாது தவித்தேன். அம்மா! எனக்கும் ஒரு தகவலும் தெரியாது. இன்று விடியற்காலையில் ஒரு புண்ணியவான் இவரைக் கொணர்ந்து இங்கு சேர்த்தார். அவருக்கும் விவரம் ஒன்றும் தெரியாதாம். இவருக்குச் சரியானபடி நினைவில்லை என்பது தெரிகிறது. சற்று போதிற்கொருதரம் "ஹா! என் கண்ணே! சுலோசனா! உன்னை மீண்டும் காண்பேனா! உன்னை எந்த சண்டாளர்கள் தூக்கிக்கொண்டு சென்றார்கள்? நான் இத்தனை பாடு பட்டும் பாவியானேனே!" என்று கூறுகிறார். கண்ணைத் திறந்து பார்க்கிறார். உடனே மூடிக்கொள்கிறார். இவருடைய தேகம் மிகவும் மெலிந்து முகம் விகாரப்பட்

---

எந்த விஷயங்களையும் நமக்கு மிகவும் அன்பான, வேண்டியவர்களிடத்திலேயே தெரிவிக்க மனம் விரும்புகின்றது. அந்த விஷயத்தில் நன்மையை, கண்ணியத்தை அறிந்தவர்களிடத்தில் சொல்வதால் மனத்திற்கு உற்சாகமும் நன்மையும் உண்டாகின்றது.

டுப் போயிருப்பதைப் பார்த்தால் இவர் அதிகமான கவலையுடன் அலைந்திருப்பதாகத் தெரிகின்றது. நேற்று உன்னையும் காணாது, அவரையும் காணாது போய்விட்டதால் "உங்களுக்கு யார் என்ன தீங்கிழைத்தார்களோ!" என்று நான் பெருங் கவலைப் பட்டுவிட்டேன். நீ எங்கு என்ன ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டாய்?" என்று பரிமளா கூறியதைக் கேட்டதும் சுலோசனாவுக்கு துக்கம் பொங்கி விட்டது. "ஹா! நம்மை அந்தப் பாவி ராமச்சந்திரன் தூக்கிக் காரில் விட்டதை இவர் எப்படியோ பார்த்தோ, யார் மூலமாயினும் கேட்டோ இருக்கிறார். அதனால் அலைந்திருக்கிறார் என்றும், அதன் நிமித்தம் ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதென்றும் சுலோசனா ஒரு நொடியில் யூகித்தறிந்துகொண்டு கண்ணீருடன் அவனருகில் நிற்கையில், விமலநாதன் மீண்டும் அவ்வாறே கூறிக் கண்ணை மூடினான். இதைக் கேட்ட சுலோசனாவின் இருதயம் வெடித்து விடும் போலாய் விட்டது. "ஹா! பாவி நான் என்ன ஜென்மம் எடுத்தேன். என்னால் இவர் ஒரு வினாடியும் விடாது அனுபவிப்பது முற்றும் துன்பமாகவே இருக்கின்றதே! என் பொருட்டு இவர் சகப்பட்டு இன்புற்றார் என்பதை இப்பாவி காதில் கேட்காமல், இந்த ஆபத்தையும் கஷ்டத்தையுமே கண்டு சகித்து வருந்த நேர்ந்துவிட்டதே! என்ன செய்வேன்? இதற்கா நான் ஜென்மமெடுத்தேன். என் ஜென்மத்தின் பயன் இதுதானா! ஹா! என்ன அநியாயம்!" என்று மனம் எண்ணறியாத எண்ணங்களினால் நொந்தவாறு, தர்மாமீட்டரை (Thermometer) அவனுக்கு வைத்துப் பிறகு அதைத் தன் கையில் வைத்துகொண்டே விமலநாதனைப் பார்த்த வண்ணம், ஒன்றுமே தோன்றாமல் சிறிய குழந்தையைப் போல புலம்பிக்கொண்டே நின்றுவிட்டாள். விமலநாதனின் பெற்றோர் ஒரு புறம் பிரமைகொண்டு நிற்கின்றார்கள். பரிமளா அவன் தலைப்பக்கமாக நின்று "சுலோசனாவின் வாயினின்றும் என்ன மொழி வருமோ!" என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றாள். செல்வமணி தன் தந்தையின் பக்கலிலேயே நின்றுகொண்டிருக்கின்றது. இங்கு இத்தனை மனிதர்களிருப்பதை அறவே மறந்த சுலோசனா "என் அன்பின் உருவே! என் பொருட்டாக வல்லவா தங்களுக்கு இத்தகைய கஷ்டம் சம்பவித்தது!" என்று எண்ணி விமலநாதனின்மீது வைத்த விழியை வாங்காது நின்றுவிட்டாள்.

---

விஷயமறியாத, அறிவற்ற மிருகம் போன்றவர்களிடத்தில் தொண்டை வலிக்க விஷயத்தை எடுத்துரைத்து பயனற்றுப் போவதைவிட அத்தகையோரிடத்தில் மவுனமாக இருந்துவிடுவது நலம். **அறிவற்ற கட்டைகளுடன் பேசுவதும், அன்பற்றவர்களுடன் சினேகம் செய்வதும் ஒன்றுதான்.**

# நியூ இந்தியா

## அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

வட ஆற்காடு; கோயம்பத்தூர், நீலகிரீஸ், தஞ்சாவூர், திருச்சிணப்பள்ளி, மதுரை ஜில்லாக்களுக்கு செல்வாக்கும், ஊக்கமும் வாய்ந்த ஏஜெண்டுகள் உடனே தேவை.

லைப் இலாகாவில் கம்பெனி அளிக்கும் வசதிகளாவன:— பாலிஸிதார்களுக்கு:—

[1] தானகவே கிடைக்கும் பறிமுதல் செய்யப்படாத உரிமை, [2] நீடித்த கால அஷியூரன்ஸ், [3] கஷ்டகாலத்துக்கான சாசுவத அனுகூலங்கள், [4] எதிர்பாராத சம்பவத்தால் மரணமேற்படுவதற்கு இரண்டு பங்கு தொகை அளிக்க உறுதி கூறப்படுவது, [5] ராஜீயக் குற்றத்துக்காகச் சிறை செல்லும் பாலிஸிதாரர்களுக்கு அவர்கள் சிறையிலுள்ள வரையில் பிரத்யேக ஏற்பாடுகள்.

ஏஜண்டுகளுக்கு:—

[1] தாராளமான கமிஷனும், போனஸும், [2] மீண்டும் தொடங்கப்படுவதற்குச் சாசுவதமான கமிஷன், [3] கம்பெனியுடன் நேரான சம்பந்தம்.

நெருப்பு, கப்பல் விபத்து, மோட்டார் விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்கட்கும் ஏஜண்சிகள் கிடைக்கும்.

**கே. கே. ஸ்ரீனிவாஸன்**
**பிராஞ்சு மானேஜர்.**

4—5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

அதிஅற்புதமான பன்னிரண்டு

# நாவல்களின் களஞ்சியம்

**“பன்னிரு மரகதங்களின் மர்மம்”** என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். ‘பிரஜானுகூலன்’ நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தருகின்றது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனீயம், (1) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) ‘சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்ட பெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாமனார் மாறிய விசித்திரம். **இந்த ஒவ்வொரு நாவலும் மிக்க அருமையானவை.** இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கிறன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3.** உடனே எழுதுங்கள்.

இந்நாவல் “பிரஜாநுகூலன்” பத்திராதிபர் இயற்றியது. ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்

**பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.**


---


## அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், காண்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு, சிவில் புரோசிஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக், புரோநோட் இவை சம்பந்தமான) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1-க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம் இந்தியா, பர்மா, சிலோன், முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா (முன் பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5-12-0. (ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினால், அனுப்பப்படும்.

**அகில இந்திய லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா.**

(M. & S. M. Ry.)

## இனாம் பல பரிசுகள் இனாம்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்ததுமுதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதாவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்கண்டவாறு பரிசுகள் கொடுக்க எற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப் பார்களென்று நம்புகிறோம்.

| | | | பரிசு புத்தகங்கள் |
|---|---|---|---|
| (1) | ஒரு | புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு | மாதவமணி அல்லது அமிர்தமாலினி |
| (2) | 2 | புதிய சந்தாதார்களை ,, | வீரவஸந்தா |
| (3) | 3 | ,, ,, | கோபாலரத்னம் |
| (4) | 4 | ,, ,, | சுகந்தபுஷ்பம் |
| (5) | 5 | ,, ,, | கௌரிமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை |
| (6) | 6 | ,, | சண்பகவிஜயக |
| (7) | 7 | ,, ,, | நவநீதகிருஷ்ணன் |
| (8) | 8 | ,, ,, | வைதேகி அல்லது பத்ம சுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனு |

210028.

---


# DON'T FAIL TO READ

## THE MOVIE MIRROR

The Cinema Magazine of merit with the largest circulation. The only one of its kind in South India.

Containing the latest comment pictures, criticism and news concerning Indian pictures, reviews and personalities.

Carries more Producer, Distributor advertising matter than all other Cinema Film Papers combined.

**THERE MUST BE A**

*Reason..................*

**For Rates & Subscription Apply:**

THE MOVIE MIRROR

POST BOX 1205. G. P. O.

MADRAS.

**கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;**

**உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள**

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8.0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

**ஸிட்டி கேசவுச் சாலை,**
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

**ஏஜண்டுகள் தேவை.**

Published by V. M. Parthasarathy Iyengar,
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

# "ஜகன்மோகினி" யில்

## வெளிவந்த நாவல்கள்.

---

மலர் 1. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் 1. | காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) | ரூ. | 4 | 0 | 0 |
| மலர் II. | விலாஸவதி (2-பாகங்கள்) | ரூ. | 3 | 0 | 0 |

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| கனகசபை | ரூ. | 1 | 8 | 0 |
| கோகிலம் | ரூ. | 0 | 6 | 0 |

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் III. | வைதேகி (2-பாகங்கள்) .... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் IV. | பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் V. | ராதாமணி (2-பாகங்கள்) ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் VI. | நவநீதகிருஷ்ணன் ... | ரூ | 2 | 0 | 0 |
| மலர் VII. | சாருலோசனா (2 பாகங்கள்) .... | ரூ. | 2 | 0 | 0 |
| | ருக்மிணீ காந்தன் .... | ரூ. | 2 | 0 | 0 |
| | சண்பக விஜயம் .... .... | ரூ. | 1 | 12 | 0 |
| | கௌரீ முகுந்தன் .... | ரூ. | 1 | 12 | 0 |
| | சுகந்தபுஷ்பம் .... | ரூ. | 1 | 0 | 0 |
| | கோபால ரத்னம் ... | ரூ. | 0 | 14 | 0 |
| | வீரவஸந்தா .... | ரூ. | 0 | 8 | 0 |
| | மாதவமணி .... .... | ரூ. | 0 | 3 | 0 |

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| வைதேகி ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் .... .... | ரூ. | 2 | 0 | 0 |
| ராதாமணி .... .... | ரூ. | 2 | 0 | 0 |
| சாருலோசனா .... .... | ரூ. | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் .... .... | ரூ. | 1 | 12 | 0 |
| ருக்மிணீ காந்தன் .... .... | ரூ. | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் .... .... | ரூ. | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் .... .... | ரூ. | 1 | 8 | 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

---

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதனசிங்கர் | ரூ. | 1 | 0 | 0. | மர்மமுகி | ரூ | 0 | 12 | 0 |
| வஸந்தசமுத்ரா | ரூ. | 0 | 12 | 0 | அமிருதமாலினி | ரூ. | 0 | 4 | 0 |

வத்ஸலா கம்பெனி, திருவல்லிக்கேணி.

# அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

**40 வருஷங்களாக**

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.